http://www.pustaka.co.in

# எட்டு பொம்மை காவல்

# Ettu Bommai Kaaval

Author:

இந்திரா சௌந்தர்ராஜன்

Indira Soundarrajan

For more books

http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1
அத்தியாயம் 2
அத்தியாயம் 3
அத்தியாயம் 4
அத்தியாயம் 5
அத்தியாயம் 6
அத்தியாயம் 7
அத்தியாயம் 8
அத்தியாயம் 9
அத்தியாயம் 10
அத்தியாயம் 11
அத்தியாயம் 12

# 1

**"குருவராயபண்ணாடி சொன்ன ஒவ்வொன்றும் அட்சர லட்சம் பெறும். சத்தியமாக அந்த புதையலை எட்டுத் திக்கிலும் எட்டு பொம்மைகள் தான் காவல் காக்க வேண்டும்."**

பரிமேலழகன் பட்டி!

காவேரிப் பாய்ச்சலால் இளவட்டப் பயல்களின் செழிப்பான தாடி போல பசுமை தாண்டவமாடும் பூமி.

சினிமாக்காரர்கள் கண்ணில் எப்படி இத்தனை நாளாக படாமல் இருக்கிறது என்பதுதான் ஆச்சரியம்.

திருச்சி வரை ரயிலில் வந்து, பின் குணசீலம் வரை டவுண் பஸ்ஸில் வந்து அதற்கு பிறகு ஒரு ஆறு கிலோ மீட்டர் மலைப் பாம்பு பிரண்ட் மாதிரியான கப்பிச் சாலையில் நடந்து வந்தால் ஊரின் தரிசனம் கிடைக்கும்.

அந்த ஆறு கிலோ மீட்டர் சாலையில் சரியாக ஒண்ணறை கிலோமீட்டர் ஒரு சின்ன குன்று ஒன்றும் உண்டு. சக்களத்தி கரடு என்று அதற்கு பெயராம். (இதற்கு பின்னாலே ஒரு கதை இருக்கிறதோ?)

கரட்டில் ஏகத்துக்கும் அரைகுறை சிற்பங்கள். யாரோ ஒரு சிற்பி வேலை மெனக்கெட்டு அங்கே டேரா போட்டு சிற்பம் செதுக்க பழகிக் கொண்டது போல கரடு முழுக்க ஒரே சிற்பங்கள்தான். ஆனால் அவ்வளவும் அரைகுறை...

அவ்வளவையும் பார்த்து மோவாயில் யாராவது கை பதித்தால் அவர் ஊருக்கு புதியவர் என்று தலைமேல் அடித்து சத்தியம் செய்து சொல்லிவிடலாம். மற்றபடி பரிமேலழகன் பட்டிக்காரர்கள் அந்த குன்றை திரும்பிக் கூட பார்க்கமாட்டார்கள். அவர்களுக்கு எதனாலோ அதை எல்லாம் பார்க்கவே பிடிக்கவில்லை.

ஆளாளுக்கு வண்டி கட்டிக் கொண்டும் மாடு பிடித்துக் கொண்டும் கப்பிச் சாலையில் போய்க் கொண்டுமிருந்தார்கள்.

அதோ அந்தக் கூட்டத்தில் இன்று கல்யாண சுந்தரமும் அவன் சகாக்கள் மூன்று பேரும் இருந்ததுதான் ஆச்சரியம்...

அவன் கையில் ஒரு ஹோல்டான் பேக்... மற்றவர்கள் பிரீஃப் கேஸ்கள்...

கால்களில் தெனாவெட்டான நடை.

"இந்த சங்கர நாராயணனை பெல்ட்டாலையே அடிக்கணும்டா. இப்படியா வண்டி அனுப்பறேன்னுட்டு கழுத்தறுப்பான்..."

"ஒருவேளை வண்டி வந்துட்டு திரும்பிடிச்சோ என்னவோ?"

"அது எப்படி திரும்பும்... அதான் ஒருத்தருக்கு நாலு பேர் கல்யாணத்துக்கு வரோம்னு தெரியும்ல? இருந்து பார்த்து கூட்டிகிட்டு போகாம... இடியட்!" சகாக்கள் சங்கரநாராயணன் என்பவனை வாய்க்கு வந்தபடி திட்டியபடியே நடந்த கொண்டிருந்தார்கள்.

மாட்டைப் பத்தியபடி நடந்து கொண்டிருந்த ஒரு விவசாயியைப் போன்றவனின் காதில் அது விழவும் அவன், "சங்கர் தம்பி வீட்டுக் கல்யாணத்துக்கு வர்ற தம்பிங்களா நீங்க?" – என்று கேட்டபடியே தன் காவிப் பல் தெரிய ஒரு சிரிப்பு சிரித்தான்.

"ஆமாங்க... உங்களுக்கு சங்கர நாராயணனை தெரியுமாங்க...?"

"அட என்ன தம்பி அப்படி கேட்டுட்டீங்க... எங்க ஊர்லையே காலேஜ்லாம் போய் படிச்சிருக்கற ஒரே புள்ள அதுதான். அதை தெரியாதாக்கும்."

"அது சரி... ஊருக்கு இன்னும் எவ்வளவு தூரம் இருக்கு?"

"அது கெடக்கு கொள்ள தூரம்... ஆமா வண்டி அனுப்பறேன்னு சொல்லியிருந்துச்சா தம்பி?"

"ஆமாங்க... ஆனா இப்ப நடக்க விட்டுட்டான்..."

"இருக்காதே... அந்த தம்பி சொன்னா சொன்ன மாதிரி நடந்துக்குமே... அதுலையும்

அதோட அக்கா கல்யாணத்துல கலந்துக்கறதுக்காக வர்ற உங்களுக்கு வண்டியனுப்பாம இருக்கவே இருக்காதே..."

"இப்ப உங்க கூடத்தானே நாங்களும் நடந்து வர்றோம். வண்டி வந்துருந்தா இப்படியா புலம்புவோம்..."

அவர்கள் கேட்பதிலும் நியாயம் இருந்ததால் அந்த விவசாயி தன் ஐந்து நாள் சிரைக்காத தாடையை பரபரவென்று தேய்த்துக் கொண்டான்.

"என்னங்க பதிலைக் காணோம்?"

"என்னத்த சொல்ல... ஊரே கல்யாண முஸ்தீபில இருக்குது. ஒருவேளை உங்களுக்கு அனுப்ப வண்டி இல்லையோ என்னவோ?"

"எது எப்படி இருந்தாலும் சரி... போய் அவனுக்கு ஒரு மண்டகப்படி இருக்கு நாயே... உனக்கே இது நியாயமாடான்னு கேட்டு சட்டையைப் பிடிக்கத்தான போறோம்."

சகாக்களிடம் அபார சளம்பல்... அதில் ஆழ்ந்த நட்பின் அடர்த்தி! விவசாயி முகத்தில் பதிலுக்கு சிந்தனைதான் தேங்கியிருந்தது. நடை மட்டும் நிற்கவில்லை.

பக்கவாடெங்கும் கோரைப் புதர்கள்... புதர்களைத் தாண்டி பச்சைக் கம்பளம் விரித்த மாதிரி வயல். வயல்களில் அங்கும் இங்குமாக கொக்குக் கூட்டம்.

சர்வத்தையும் ஒருபார்வை பார்த்தபடி ஒரு ஒடுக்கில் திரும்பியபோதுதான் கண்ணில் பட்டது சக்களத்தி குன்று.

நெருங்க நெருங்க அரையும் குறையுமான மனித உருவங்கள்! நந்திகள். யானைகள் என்று தெரிய... அவர்கள் நால்வர் கண்களிலும் ஆச்சரியத்தின் ஆக்ரமிப்பு.

"கல்யாணம்... பாத்தியாடா இந்த மலைல. எங்க பார் ஒரே சிற்பமா இருக்கு... ஆச்சரியமா இல்லை?"

"ஆமாண்டா... சங்கரன் கூட இந்த கரட்டைப் பத்தி அடிக்கடி சொல்லியிருக்கான். இப்பத்தான் ஞாபகம் வருது..."

"தம்பிகளா... பேசாம வாங்க. இது ஒரு பாழ்பிடிச்ச கரடு. கலையும் சிலையுமா இருக்கேன்னு மயங்கினீங்கனா அவ்வளவுதான். பேசாம வாங்க..."

அந்த மாட்டுக்கார மனிதன் குறுக்கிட்டு ஒரு சாதாரண விஷயத்துக்கு எதனாலோ முட்டுக்கட்டை போடுவது போல பேசினான்.

அவர்களுக்கு ஆச்சரியம் அதிகமாகிப் போனது.

"ஏன் அப்படிச் சொல்றீங்க?" –கல்யாண சுந்தரம்தான் கேட்டான்.

"இந்த கரட்டைப் பத்தி சங்கரு உங்ககிட்ட வேற ஒண்ணுமே சொன்னதில்லையா?"

"இல்லையே..."

"நல்லது. நல்ல காரியத்துல கலந்துக்கறதுக்கு வந்துருக்கீங்க. இதை எல்லாம் தெரிஞ்சுகிட்டு மனசு சஞ்சலப்படாம ஊருக்கு போய் சேர்ற வழியைப் பாருங்க..."

மாட்டுக்கார விவசாயி தன் பேச்சில் கொஞ்சம் போல மர்மத்தை அரைத்து பூசினான். நடை பாட்டும் தொடர்ந்து கொண்டிருந்தது.

"அண்ணாத்தே... என்ன நீங்க? பசுமையான வயக்காட்டுக்கு நடுவுல ஒரு கரடு இப்படி சிற்பங்களோட இருக்குதே. என்ன விஷயம்னு சாதாரணமாத்தானே கேட்டோம். அதுக்கு நேரா பதிலைச் சொல்லாம என்னென்னமோ சொல்றீங்களே..."

கல்யாண சுந்தரம் மடக்கினான். அந்த மாட்டுக்காரன் பதிலுக்கு ஒரு பார்வை மட்டும் பார்த்தான். எதுவும் பேசவில்லை. அவனது மாடு பக்கவாட்டு புதரில் வாயை வைத்து கோரைப் புல்லை வளைத்து கரிச்சுப் பார்த்தது.

"தா... தா... இங்க போய் வாயை வெச்சுகிட்டு... நட.. நட...

"அதை இழுத்து நடுச்சாலைக்குக் கொண்டு வந்துவிட்டான்.

நால்வரையும் திரும்பவும் ஆச்சரியம் ஆக்ரமித்தது. ஒருவரை ஒருவர் பார்த்துக்

கொண்டார்கள். அப்பொழுதுதான் அந்த அவலமான காட்சியையும் பார்த்தார்கள்.

ஒரு வில் வண்டி சாலையோர புதரில் விழுந்து கிடக்க மாடிரண்டும் ஒரு புதர் மறைவில் நின்று கொண்டிருந்தது.

வண்டி ஓட்டி சேறும் சகதியுமாக வரப்பு ஒன்றின் மேல் விழுந்து கிடந்தான்.

அவனைப் பார்த்த நொடிப் போதில் ஓடிப் போய், அவனைத் தொட்டுத் தூக்கத் தொடங்கினான் மாட்டுக்கார மனிதன்.

"எலே... எலே... அம்புலி... என்னலே இது... என்னாச்சுலே உனக்கு?"

பதறியபடி வயலில் தேங்கியிருந்த தண்ணீரை கைகளில் அள்ளி முகத்தில் அடித்து அவனை எழுப்ப முயல அவனும் அரைகுறைப் பிசிர்களோடு கண்களைத் திருந்தான்.

"அம்புலி... என்னலே... என்னாச்சு?"

"யாரு மாணிக்கம்...?"

"மாணிக்கமேதான். என்னாச்சுலே உனக்கு?"

அப்படியே திரும்பி, "தம்பிகளா... உங்களுக்காக வந்த வண்டிக்காரன் இவன். வண்டியனுப்பலேன்னு சொன்னீங்களே பார்த்தீங்களா... வண்டி இங்க குடை சாய்ஞ்சு கிடக்கு!"

அந்த மாட்டுக்காரன் பதிலைத் தொடர்ந்து கல்யாண சுந்தரமும் அவன் நண்பர்களும் அடடா என்கிற மாதிரி பார்த்தனர்.

அம்புலி என்று அழைக்கப்பட்ட வண்டி ஓட்டியும் எழுந்து நின்றபடி கேட்டான்.

"தம்பிகளா... நீங்கதான் எங்க சங்கர் தம்பி ஸ்னேகிதங்களா...?"

"ஆமாங்க... ஆமாம் எப்படி இப்படி ஆச்சு?"

"கொஞ்சம் வேகமாக இந்த பக்கம் வண்டியை வெறட்டிட்டேன். சாதாரணமாக வந்தாலே இந்த இடத்துல மட்டும் திகட்டல்தான். இன்னிக்கு வேகமாக வந்தேன். சக்களத்தி கவுத்து உட்டுப்புட்டா...!" – என்றபடியே அந்த அரைகுறை சிற்பக் குன்றை

நோக்கி ஒரு பார்வை பார்த்தான் அவன்.

முதலில் மாணிக்கம் என்னும் அந்த மாட்டுக்காரன் புதிர் போட்டிருந்தான். இப்பொழுது இந்த வண்டிக்காரன்.

நால்வரின் பார்வையும் ஆழமாக ஒருமுறை அந்தச் சக்களத்தி குன்றுப் பக்கம் போனது.

"சரி... சரி... வண்டியை நிறுத்தி இவங்களைக் கூட்டிகிட்டு போற சோலியைப் பாரு. நீ பாட்டுல எதையாவது உளறி வைக்காதே. அப்பால கித்தாப்பு பேசுன பட்டணத்தானுக்கு ஆன மாதிரி ஏதாவது இவங்களுக்கு ஆகி வெக்கப் போவுது..."

மாணிக்கம் என்னும் அந்த மாட்டுக்காரனிடம் திரும்பவும் மர்மம் பொங்கித் ததும்பும் ஒருவிதமான பதில்!

## 2

**'ராஜாக்களுக்கு மெய்க்காவலர்கள் காவலாக இருப்பார்கள். அதேபோல கோவிலில் உள்ள தெய்வங்களுக்கு துவார பாலகர்கள் காவலாக இருப்பார்கள். ஏன் ஒரு ஊருக்கே எல்லைச்சாமி என்பது காவலாக இருக்கும்.**

**அதுபோலத்தான்... பண்ணாடியின் புதையலுக்கு எட்டு பொம்மைகள் காவல் இருக்கின்றன.'**

கல்யாண வீடு.

தென்னங்கிடுகுப் பந்தலும் லவுட் ஸ்பீக்கர் குழாயுமாக கலகலவென்று இருந்தது. ஸ்பீக்கரில் 'அழகிய தமிழ் மகள் இவள்...' என்னும் எம்.ஜி.ஆர். பாட்டு...

பாட்டைக் கேட்டுக் கொண்டே வண்டியில் இருந்து கல்யாண சுந்தரமும் அவன் நண்பர்களும் இறங்கினார்கள்.

யாரோ ஒரு பெண்... கிராமத்து ஜோதிகா போல் ஒரு தோற்றம் நால்வரையும் பார்த்துவிட்டு, "சங்கரண்ணே உங்க ஃப்ரெண்ட்சுங்க வந்துட்டாங்க" – என்றபடி

உள்ளோடினாள்.

ஒரே பார்வைதான்!

கல்யாண சுந்தரத்துக்கு ஒரு மின்னலைப் பார்த்த மாதிரி இருந்தது.

"கல்யாணம், பொண்ணு சூப்பரா இருக்கால்ல?"

"அடப்பாவி... ஆரம்பிச்சுட்டியா?"

"என்னடா நீ... ஆள் அம்சமா இருந்தா ரசிச்சு ஒரு கேள்வி கேட்கக் கூடாதாடா?"

"சரி சரி பொத்திகிட்டு வாங்கடா..." – கல்யாண சுந்தரம் சகாக்களை அதட்டி அடக்க, எதிரில் அவர்கள் நண்பன் சங்கர நாராயணன்.

"கல்யாணம்... சுகுமாரு, ரமேஷ், உப்பிலி...." – என்று எல்லோர் பேரையும் சொன்னபடி வந்து அவர்களை கட்டிக் கொண்டான்.

லவுட் ஸ்பீக்கர் அவன் தொடர்ந்து பேசியதை கேட்க முடியாதபடி சதி செய்து 'பாவை இதழ் இதோ... இதோ...' என்று ஓடிப்போன பெண்ணின் இதழை ஞாபகப் படுத்தியது.

கல்யாண சுந்தரம் ரசித்தபடியே அந்த பெண்ணைத் தேடினான்.

"வாங்கடா உள்ள போகலாம்... இங்க எது பேசினாலும் காதுல விழாது" என்றபடியே கல்யாண சுந்தரத்தோடு சங்கர நாராயணன் உள்ளே செல்ல நண்பர்கள் தொடர்ந்தனர்.

அந்தக்கால வீடு... மரத்தாலான மாடிப்படிகள்!

அதில் வார்னீஷ் பளபளப்பு... நடுநடுவே கல்யாண வீட்டுக் கூட்டத்தின் குறுக்கீடுகள்.

அனைத்தையும் ஒதுக்கிக் கொண்டு மாடிப்படி ஏறும் போது எதிரில் சங்கர நாராயணனின் அம்மா சந்திராவதி வந்தாள்.

"அம்மா... இவங்க என் ஃப்ரெண்ட்சுங்க. இவன் கல்யாணம். அவன் சுகுமார்... அந்த சப்பவாயன் பேர் ரமேஷ். வெள்ளைக்காரன் மாதிரி இருக்கற இவன்தான் உப்பிலி..."

"டேய்... அறிமுகப்படுத்தற லட்சணமாடா இது?"

"இப்படிச் சொன்னாதாண்டா நம்ம நட்போட

டெப்த் எங்கம்மாக்கு தெரியவரும்."

"சரி... சரி... போய் குளிச்சுட்டு தயாராகுங்க. கல்யாண வேலை தலைக்குமேல இருக்குது..."

சந்திராவதி புன்னகையை உதிர்த்தபடி நழுவிப் போக, மாடிப்படி ஏறி அங்குள்ள அறை ஒன்றில் நால்வரோடும் சங்கரநாராயணன் ஒடுங்கினான். கதவைத் தாழிட்டான். அறையின் தரையில் வாழைத்தார். பூசணிக்காய், பலாப்பழம், நெய் டின் என்று ஒரே கல்யாணச் கச்சடாக்கள்!"

"உக்காருங்கடா... எங்க வராம போயிடுவீங்களோன்னு நினைச்சு கவலைப்பட்டுகிட்டிருந்தேன்."

"ஏண்டா... வரேன்னு சொல்லிட்டு வராம இருப்போமா..."

"அது சரி... ஏண்டா லேட்டு- பஸ் கிடைக்கலியா?"

"பஸ்ஸெல்லாம் கிடைச்சிச்சு. நீ அனுப்பின வண்டிக்காரன் போட்டு பார்த்துட்டான். வழியிலையே ஒரு கரடு இருக்கே. அங்கே குடை சாஞ்சு மயக்கம் போட்டு உழுந்து கிடந்தான். எழுப்பி நாங்க அவனை கூட்டிக்கிட்டு வந்துருக்கோம். தெரிஞ்சுக்க..."

"என்னது வண்டி குடை சாஞ்சிடிச்சா...?"

"ஆமாண்டா... அது சரிடா... அது என்னடா சக்களத்தி கரடு- பேரே ஒரு டைப்பா? அதைப் பத்தி வர வழியில ஒரு ஆள்கிட்ட கேட்டேன். பேசாம ஊர் போய்ச் சேருங்கறான். அப்படி என்னடா இருக்கு அந்த சக்களத்தி கரட்டுல...?"

வந்ததும் வராததுமாக நண்பர்கள் கரட்டை பற்றி பேசவும் சங்கர நாராயணன் முகத்திலும் பதற்றம் தொற்றிக் கொண்டது.

"ஒண்ணுமில்லடா... அதைப் போய் இப்ப பேசிகிட்டு... விடுங்கடா. சரி இப்ப என்ன சாப்பிட்றீங்க. பனங்கருப்பட்டிய தட்டிப் போட்டு காபி கொண்டுகிட்டு வரவா?"

"பேச்சு மாத்தாதே... சக்களத்தி கரட்டைப் பத்தி முதல்ல சொல்லு. ஏதோ சினிமா கதைல வர்ற மாதிரி ஆளாளுக்கு மர்மமா பில்ட் அப்

மட்டும் கொடுத்தா எப்படி என்னன்னுதான் சொல்லேன்..."

கல்யாண சுந்தரம் விடாமல் கொக்கி போட்டான்.

"சொல்றேண்டா... முதல்ல குளியுங்க. நிறைய டயம் இருக்கு. கல்யாண வீட்டுக்கு வரதாயிப் பாட்டின்னு ஒரு பாட்டி வருவாங்க. அவங்ககிட்ட உங்களை அறிமுகப் படுத்தி வைக்கறேன். பாட்டி என்னை விட சூப்பரா கதையைச் சொல்வாங்க. அப்ப கேட்டு தெரிஞ்சுக்குங்க. இப்ப முதல்ல குளிக்கற வழியைப் பாருங்க..."

"சரி எங்க இருக்கு பாத்ரூம்?"

"பாத்ரூம் ஏது இங்க? கோவில் குளத்துக்கு போவோம்..."

"குளத்துலையா... தண்ணி நல்லா இருக்குமா?"

"நல்லா இருக்குமாவா... எங்க ஊர் குளத்தைப் பார்த்தா அசந்து போயிடுவே..."

"அப்ப கிளம்பு... அந்த குளத்தை ஒரு கை பார்த்துடுவோம்..."

"பாத்துடா... அசந்து குளிக்கறவங்களை எங்க ஊர் குளம் விழுங்கிடும்னு சொல்வாங்க. ஜாக்கிரதையா குளிக்கணும்..."

அங்கேயே எச்சரிக்கை எல்லாம் செய்து விட்டு சங்கரநாராயணன் அவர்களை குளத்துக்கு கூட்டிக் கொண்டு புறப்பட்டான்.

கல்யாண சுந்தரம் பார்வை ஞாபகமாக முன்பு தென்பட்டு மாயமான, மறைந்து போன பெண்ணை ஒரு முறை தேடி ஒரு வட்டம் போட்டு திரும்பியது.

"யாரடா தேட்றே... ஜோதிகாவையா?"

"அவங்க அக்காவை... வாடா வாயை மூடிகிட்டு."

"நக்மான்னாலும் ஓ.கே. தாண்டா... ஆனா கங்குலிகிட்ட கேட்கணும்..."

"டேய் பேசமா வாங்கடா... அம்மா உங்களோட நான் குளத்துக்கு கிளம்பறதை பார்த்தா கத்துவாங்க." – சங்கரநாராயணன்

சமாளிப்பாக ஒரு பக்கமா ஒதுங்கி வேகமாக செல்ல நால்வரும் பின் தொடர்ந்தனர்.

"ஆமா கல்யாணம் உன் அக்காவுக்குதானே...?"

"அடப்பாவி... கல்யாண வீட்டுக்கு வந்து கேக்கற கேள்வியாடா இது?"

"டேய் உப்பிலி.... ஏண்டா கடிக்கறே. பேசாம வாடா..."

நண்பர்கள் ஏக கலகலப்போடு அந்த கிராமத்து மண்ணின் சின்னச் சின்ன சந்து பொந்துகளில் புகுந்து குளத்தங்கரையை அடைந்த போது நிஜமாலுமே பிரமிப்பில் கண்ணிரண்டும் காது வரை விரியத்தான் செய்தது.

கிட்டதட்ட முந்நூறு மீட்டர் நீள அகலத்தில் திருக்குளம். நடுவில் ஒரு நீராழி மண்டபம். குளத்தங்கரையில் கல்படிகள்... அதில் மண்டிக் கிடக்கும் பாசி...

அங்கங்கே சிலர் படி அருகே அமர்ந்து கொண்டு குளித்தபடி இருக்க கடலோரம் வாங்கிய காற்று குளிராக இருந்தது நேற்று..." என்னும் எம்.ஜி.ஆர். பாட்டு தேய்ந்து வந்து காதில் விழுந்தபடி இருந்தது.

"வாவ்... பியூட்டி ஃபுல் பிரமாதமா இருக்குடா குளம்..."

"எம்.ஜி.ஆர். பாட்டு எப்பவும் சூப்பராதாண்டா இருக்கும்..."

"டேய் நான் குளத்தை சொன்னேண்டா..."

அம்புலி வாயைப் பிளந்தான். கரை ஓரமாக குளத்தின் ஈசான்யத்தில் ஒரு நாய் சிலை. கொஞ்சம் உடைந்தும் சிதைந்தும் அதன் மேல் அவர்கள் கழட்டி எறிந்த சட்டையும் லுங்கியும் போய் விழுந்து அதை முழுவதுமாக மூடியது.

அவர்களும் குளத்தில் இறங்கி காலை நனைத்தபடி நிற்கத் தொடங்கினார்கள்.

## 3

யோகத்தில் தேர்ந்தவர்களால்

**நீரில் மிதக்க முடியும், காற்றில் பறக்க முடியும். எந்தவித ஆதாரமும் இல்லாமல் அந்தரத்தில் சப்பணமிட்டு அமர முடியும். குருவராய பண்ணாடி இதில் எல்லாம் வித்தகர்.**

குளத்து நீரில் குளிப்பது என்பதே ஒரு தனி சுகம்தான்! அதிலும் கெண்டை மீன் கணுக்காலை கடிக்க, பக்கவாட்டு பொந்துகளில் தண்ணீர் பாம்புகள் தலையை நீட்டிக் கொண்டு ஒரு முழி முழித்துக் கொண்டு பார்க்க முங்கி முங்கிக் குளித்து 'பிர்ர்ர்' என்று தண்ணீரை வாயில் இருந்து கொப்புளித்து பின் மல்லாக்கப்படுத்தபடி மிதந்து வானில் தெரியும் சூரியனைப் பார்த்து கண்கள் கூசிட கசக்கி விட்டுக் கொண்டு...

நால்வருக்குமே ஏக கொண்டாட்டமாகத்தான் இருந்தது.

நடுவில் கல்யாண சுந்தரத்துக்கு காதுக்குள் தண்ணீர் புகுந்து கொண்டு ரகளை பண்ணியது. தொடர்ந்து குளிப்பது சங்கடமாகிப் போனது. குளித்தவரை போதும் என்கிற மாதிரி சங்கர நாராயணன் தண்ணீருக்குள் கூத்தடித்துக் கொண்டிருக்க, கரை ஏறிவிட்டவனை நால்வரும் பார்த்தனர்.

"என்னடா கரை ஏறிட்டே...?"

"காதுக்குள்ள தண்ணி பூந்திருச்சுடா!"

"அப்படியா தலையை விறுவிறு என்று ஆட்டி மளுக்கென்று சாய்டா தண்ணி வெளில வந்துடும்."

ஒருவர் சொல்ல கல்யாண சுந்தரமும் தலையை ஆட்ட உப்பிலிக்கு அவன் தலையை அப்படி ஆட்டுவது சிரிப்பை வரவழைத்தது.

"மாப்ள... பார்த்துடா தலை தனியா எங்கையாவது பிச்சுக்கிட்டு போயிடப் போவது."

நீ சொல்ல மாட்டே... உன் காதுல தண்ணி பூந்தா உனக்கு தெரியும்- ஆக்ச்சூ!" பதிலோடு ஒரு தும்மல்.

"தண்ணி காதுல பூந்துக்கறத ஒரு

விஷயம்னு பேசறான். பார்டா இவன். ஹலோ... நான் ஒரு தண்ணிக் கோழி. தண்ணிக்கடியிலேயே கிடப்பேன். எனக்கு ஒண்ணும் ஆகாது தெரிஞ்சுக்கோ..."

உப்பிலி தெனாவெட்டாக பேசி விட்டு சமுத்திரத்து திமிங்கலம் எட்டிப் பார்த்து கரணம் அடிக்கிற மாதிரி தண்ணீருக்குள் ஒருமுறை உள்ளே போய் விட்டு வெளியே வந்தான்.

"டேய் பார்த்துடா... வந்த இடத்துல சர்க்கஸ் வேலை பார்த்து பரலோகம் போய் சேர்ந்திடாதே. உன் அம்மாவுக்கு அப்புறம் நாங்க பதில் சொல்லணும்..."

"டேய் எண்டா ஆளாளுக்கு மிரட்டறீங்க. நாம என்ன பசுபிக் மகா சமுத்திரத்துலையா குளிச்சிகிட்டிருக்கோம், பயந்து சாகறதுக்கு... மிஞ்சி போனா பத்தபடி ஆழம் இருக்குமாடா இந்த குளம்?"

"பத்தடியா.. இது எவ்வளவு ஆழம்னு இதுவரை யாருமே கண்டுபிடிச்சதில்லை தெரியுமா?"

சங்கரநாராயணன் பெருமிதத்தோடு சொன்னது ஒரு சவாலுக்கு காரணமாக ஆரம்பிக்கிறது.

"நான் கண்டுபிடிச்சுட்டா?" உப்பிலி எகிறத் தொடங்கினான்.

"டேய் சாமி... நாம கல்யாணத்துக்கு வந்துருக்கோம். குளம் எவ்வளவு ஆழம்னு பாக்கறதுக்கு இல்லை. நீ முதல்ல கரை ஏறு?"

ரமேஷ் உடம்பு உதற டவலால் துடைத்துக்கொண்டே உப்பிலியை வெளியே வரச் சொன்னான்.

"நீ ஒருத்தன்டா... நாம இப்படிச் சொல்வோம்னு தெரிஞ்சுதான் அவன் அளக்கட்டுமா பொளக்கட்டுமாங்கறான். ஆபீஸ்ல முழுசா ஒரு ஃபைல் பார்த்து அனுப்ப முடியாத அரைகுறை ஆளு குளத்துக்குள்ள இறங்கி ஆழத்தை அளக்கப் போறானாக்கும் ஹீம்! ஏறுடா நாயே... முதல்ல கரை ஏறு

கல்யாணச் சாப்பாடு காத்துக்கிட்டிருக்கு. போய் ஒரு வெட்டு வெட்டுவோம்..."

நண்பர்களில் சுகுமாரின் உரிமையுள்ள சீண்டல் அம்புலியை ஆழமாகவே பாதித்து விட்டது போல் தோன்றியது.

அடுத்த நொடி ஒரு முறை முறைத்து விட்டு ஒரு எம்பு எம்பி உள்ளே போனவன்தான்...

வெளியே நண்பர்கள் நால்வரும் திணறிப் போனார்கள்.

காற்றில் 'நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான்... நான்' என்னும் எம்.ஜி.ஆர். பாட்டின் சன்னமான தழுவல்.

"டேய் என்னடா இது. விளையாட்டா சொன்னதை இப்படி சீரியஸா எடுத்துக்கிட்டு உள்ள போயிட்டான்?"

"எல்லாம் உன்னால் தாண்டா... அவனைப் பத்தித்தான் தெரியும்ல. முடியாதுன்னா முடியும்பான். முடியும்னா முடியாதும்பான். எதுலையும் ஏட்டிக்கு போட்டியான பார்ட்டி அவனைப் போய் உசுப்பேத்தி விட்டுட்டியேடா நாயே."

ரஷேம் சுகுமாரைப் பார்த்து அவன் பிடரியில் ஒரு தட்டு தட்டியபடி ஆவேசித்தான்.

"இருடா... தம் கட்ட முடியாம இப்ப தவிச்சுகிட்டு வெளிய வரப் போறான் பாரு."

"வரட்டும் அவன்... சங்கரா இப்படி ஒரு குளம் இருக்கறத நீ எங்களுக்கு காட்டியிருக்கவே வேண்டாண்டா இப்ப பார்த்தியா...?"

"பொறுடா... நானே மிரண்டு போய் கிடக்கேன். உப்பிலி, உப்பிலி... அடேயப்பா உப்பிலி.... வெளில வாடா..." சங்கர நாராயணன் குரலில் கெஞ்சல் தொனித்தது. ஆனால் குளத்து நீர் படுகையிலோ எந்த சலனமும் இல்லை. அது உப்பிலியை நான் விழுங்கி விட்டேன் என்கிற மாதிரிதான் அமைதியாக பார்த்தது.

கரைமேல் ஒரு பெரியவர் அடக்கமாக குளித்து விட்டு தலையை துவட்டியபடி போய்க் கொண்டிருந்தார். நண்பர்களின் புலம்பலைக்

பார்த்துவிட்டு,

"என்னப்பா என்ன விஷயம்?" என்று கேட்டார்.

"ஒண்ணுமில்ல பெரியவரே... எங்க சினேகிதன் ஒருத்தன் ஆழத்தை தெரிஞ்சுக்கறேன்னு உள்ள போயிருக்கான்... ஆளைக்காணோம்..."

நால்வரும் கைகளை உதறிக் கொண்டனர்.

"அடக்கெரகமே... இந்த பைரவன்படுகை ஒரு பனமரம் ஆழமாச்சே உள்ள போனா வெளியே வரவே முடியாதே!"

"ஒரு பன மரம் ஆழமா?!"

"ஆமாம்ப்பா... ஏப்பா சங்கரு, நீ உள்ளூர்க்காரன்தானே உனக்கு கூடவா தெரியாது. சொல்றதுக்கென்ன?"

"அட நீ வேற பெரிசு. விளையாட்டா பேசுனது விபரீதத்துல போய் நிக்குது. நானே தவிச்சுக்கிட்டிருக்கேன் இதுல நீ வேற..."

பெரியவர் மூட்டிய கிலி சங்கரநாராயணனை மேலும் உலுக்கி விட்டிருந்தது. அப்பொழுது அந்த பெருசின் பார்வை கரை ஓரமாக இருந்த நாய் சிலை மேலும் போனது. அதன் மேல் நண்பர்கள் கழட்டி எறிந்த சட்டைகள் லுங்கிகள்...!

ஓடிப் போய் அதை எடுத்து எறிந்த பெரியவர் முதல் காரியமாக கன்னத்தில் போட்டுக் கொண்டார். நண்பர்களுக்கு வியப்பாக இருந்தது.

"ஆமா யாருடா உடுப்பையெல்லாம் இந்த பைரவசாமி சிலை மேல போட்டது?" பெரியவர் கத்தினார்.

நண்பர்கள் தொடர்ந்து வெறித்தனர்.

"இது சாமிடா... இது மேல போய் உங்க அழுக்கு உடுப்பை தூக்கிப் போட்டிருக்கீங்களே. இப்படியெல்லாம் செஞ்சா ஒழுங்கா ஊர் போய் சேர மாட்டீங்க. பைரவரே நாயா வந்து கடிச்சுக் குதறிப்பிடுவார் தெரியுமா?"

அலறினார் பெரியவர். நண்பர்கள் மேலும் மிரண்டனர். அதே சமயம் தண்ணீர் படுகை

மேல் அம்புலியின் தலையும் தெரிய ஆரம்பித்தது. தலையை வெளிக்காட்டியவன் 'கவாங் கவாங்' என்று மூச்சு விட்டு முடித்து விட்டு, நிதானமாக நீந்தி வந்து கல்படியில் ஏறி நின்றான். அப்படியே வலக்கையை நீட்டினான். அதில் அவன் குளத்தில் அடி ஆழத்தில் இருந்து எடுத்து வந்திருந்த மண்.

"என்னடா இது சேறு...ஃ"

"அடிவரை போய் எடுத்துக்கிட்டு வந்திருக்கேன்" என்றபடியே கைகளை விரித்தான். கொழ கொழ சேறு.

பெரியவரும் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் கண்களில் வியப்பின் விஸ்தீரணம்.

"நல்லவேளை உப்பிலி. நீ உசுரோட வந்து எங்க வயித்துல பாலை வார்த்தே. இந்த பெரியவர் வேற கண்டதைச் சொல்லி எங்களை களவரப் படுத்திட்டார்."

ஆசுவாசித்தான். ரமேஷ். பெரியவர் இனி நிற்பதில் அர்த்தமில்லை என்பது போல அங்கிருந்து விலகினார். உப்பிலி சேற்று மண்ணை கல்படி மேல் ஒரு உதறு உதறினான் சொத்தென்று படி மேல் விழுந்த அதை மற்ற நால்வரும் பார்த்தனர். அப்படிப் பார்க்கும் போதே மண்கவளத்திடம் ஒரு வித மினுமினுப்பு.

"என்னடா இது மண்ணு மின்னுது?"

கேள்வியோடு குனிந்த சுகுமார் அந்த மண்கவளத்தைத் தொட்டு உரசிப்பார்க்க வட்டாமாக ஒரு உலோக நாணயம்!

"டேய் ஏதோ காசுடா" ஆச்சரியக் கூவலோடு அதை எடுத்தவன் மளமளவென்று துடைத்து விட்டுப் பார்த்தான். ஏதோ நாணயம் போல தெரிந்த அதில் ஒரு புறம் தலை முத்திரை. பிரட்டி மறுபுறம் பார்த்ததில் ஒரு சவரன் என்கிற எழுத்துக்கள்.

நண்பர்கள் முகத்தில் இன்ப அதிர்ச்சி!

**"பண்ணாடியை தேடி பக்கத்து டவுனிலிருந்தெல்லாம் ஜோசியம் பார்க்க வருவார்கள். பண்ணாடியும் சொன்னால் சொன்னதுதான். உனக்கு தலையில் இடி விழுந்துதான் சாவு என்று ஒரு பேட்டை ரவுடியைப் பார்த்து அவர் சொன்னார். அவர் கூட அவரை அதற்காக அறைந்து விட்டான். ஆனால் அவன் சொன்னபடியே அவன் அன்றையை மழை மாசத்தில் இடி விழுந்து செத்துப் போனபோது ஊரே வாயைப் பிளந்து விட்டது!"**

கல்யாண வீட்டில் சடங்குகளை கட்டத் தொடங்கியிருந்தன! நாதஸ்வரக்காரர் ஒரு பக்கம் ஊதித் தள்ளிக் கொண்டிருந்தார். குஞ்சு குளுவான்கள் ஓடி விளையாடிக் கொண்டிருந்த வீட்டுக் கொல்லையில் சமையல் வேலை கமகமவென்று நடந்து கொண்டிருந்தது. கிராமத்து கல்யாணம். எனவே ஊரே திரண்டு வந்து கல்யாண வீடே திமுதிமு வென்றிருந்தது.

சங்கரநாராணினின் அக்கா அபிராமிதான் மணப் பெண். அவளை ஊரின் இளவட்டப் பெண்களின் கூட்டம் சூழ்ந்து கொண்டு பூச்சடை பின்னி விட்டுக் கொண்டிருக்க, கூட்டத்தில் திடீரென்று பரபரப்பு...

மாப்பிள்ளையின் அம்மாக்காரி சங்கரநாராணனின் அம்மா சந்திராவதியோடு சத்தம் போட்டு பேசிக் கொண்டிருந்தாள். ஒரு கூட்டமே அவர்களைச் சுற்றி வட்டம் கட்டி நிற்க.

"நீங்க இப்படி பேச்சு மாறக்கூடாது சம்மந்தி கொஞ்சம் கூட நல்லா இல்ல இது..."

"ஐயோ நான் பேச்சு மாறலீங்க. அப்படியெல்லாம் மாத்திப் பேசற குடும்பத்துல பொறந்தவளும் இல்ல நான்."

"இதை நீங்க வார்த்தைல சொன்னா போதாது. செயல்ல காட்டியிருக்கணும்."

"வாஸ்தவம்தான். ஒரு இடத்துல பணத்தை எதிர்பார்த்திருந்தோம். அது வரலை.

அதனாலதான் சொன்னபடி 25 பவுனை போட முடியலை. நிச்சயமா தலை தீபாவளிக்கு போட்டுட்றோம்..."

"கல்யாணமே ஆகலை. அதுக்குள்ளே தலை தீபாவளிக்கு போய்ட்டா எப்படி? எனக்கு இப்படி முன்ன ஒண்ணு பின்ன ஒண்ணு பேசுறவங்களைக் கண்டாலே பிடிக்காது."

"சம்மந்தியம்மா கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங்க. பாருங்க எல்லாரும் வேடிக்கை பாக்கறதை..."

"நல்லா பாக்கட்டும்... அதுக்கு நான் என்ன பண்ண முடியும்? கல்யாணத்தை திருச்சில ஒரு பெரிய மண்டபத்துல வெச்சு நடத்தி தர சொன்னேன். முதல்ல ஒதுக்கிட்டீங்க அப்புறம் கண்ட காரணத்தை சொல்லி இந்த அழுமூச்சி கிராமத்துலையே வெச்சுகிட்டீங்க. போய்த் தொலையுதுன்னு விட்டேன். இப்ப என்னடான்னா போட்றேன்னு சொன்ன நகைக்கு தவணை சொல்றீங்க. நாங்க ஒண்ணும் இல்லாத பொல்லாத அன்றாடம் காய்ச்சி கிடையாது. எங்களுக்கு அந்தஸ்த்தும் கௌவமும்தான் பெருசு. நீங்க நடந்துக்கறத பார்த்தா அன்றாடம் காய்ச்சி மாதிரி தெரியுது. முன்னாலேயே தெரிஞ்சிருந்தா நான் இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டே இருக்க மாட்டேன்."

மூச்சு விடாமல் பேசினாள் அந்த பெண்மணி. கூட்டம் வேடிக்கை பார்த்தது. சங்கரநாராயணனும் ஓடி வந்திருந்தான். கூடவே நண்பர்களும்.

"என்னம்மா என்ன சப்தம்?"

"ஒண்ணுமில்லப்பா... வா உள்ள போய் பேசுவோம். சம்மந்தியம்மா நீங்களும் உள்ள வாங்க..."

"நான் எதுக்கு உள்ளுக்கும் வெளிக்கும் வந்துட்டு? நீங்களே போய் பேசுங்க. என்ன பேசினாலும் சரி. சொன்ன படி நடந்துக்க முடிஞ்சாதான் கல்யாணம். இல்லாட்டி அரைமணி நேரத்துல நாங்க அவ்வளவு பேரும்

ஏறக் கட்டிடுவோம்."

அழிச்சாட்டியமாக பேசினாள் அந்த பெண்மணி. சங்கர நாராயணனுக்கு தகதகவென்று ஆனது.

"அம்மா என்னம்மா... எதுக்கு இவங்க இப்படி எல்லாம் பேசறாங்க..."

"உள்ள வா சொல்றேன்..." சந்திராவதி மகனை தள்ளிக் கொண்டு அந்த பழைய வீட்டின் மாடி அறை ஒன்றில் போய் ஒடுங்கினாள்.

"சொல்லும்மா... என்ன பிரச்சினை?"

"நம்மள மாதிரி நடுத்தட்டுக் குடும்பத்துக்கெல்லாம் பணம்தானேடா எப்பவுமே பிரச்சினை."

"என்னம்மா... நான் ஆபீஸ்ல லோன் போட்டு ஐம்பதாயிரம் தந்திருக்கேன். நெல் வித்த பணம். சீட்டு போட்ட பணம்னு நீயும் வெச்சிருக்கேல்ல...?

"இப்ப விக்கற விலை வாசிக்கு இதெல்லாம் எந்த மூலைக்குடா... எல்லா செலவையும் சமாளிச்சுட்டேன். ஆனா போடறதா சொன்ன நகைக்குதான் பணமில்ல. சரி இருக்கற நிலத்தை வித்து தீபாவளி சமயம் பண்ணிடாலாம்னு முடிவுக்கு வந்தேன். அதத்தான் சம்மந்தியம் மாக்கிட்ட சொன்னேன். ஆனால் அவங்களோ இந்த நிமிஷமே எல்லாம் செஞ்சாதான் கல்யாணம்னு கலாட்டா பண்றாங்க..."

"என்னம்மா நீ இப்ப போய் இந்த பிரச்சினையை சொல்றே? முன்னாலையே என்கிட்ட சொல்லியிருக்களாம்ல."

"சமாளிச்சுட முடியும்னு நம்பனேன் சங்கரா. இப்படி சண்டித்தனம் பண்ணுவாங்கன்னு எதிர்பார்க்கலடா..."

"அடப்போம்மா... என் நண்பர்கள்ளாம் ஊர்ல இருந்து வந்துருக்காங்க. நம்பள பத்தி என்ன நினைப்பாங்க... மானம் போகுதும்மா..."

"சங்கரா... இப்ப அழுது புலம்பறதுல பிரயோஜனம் இல்லடா. நீதான் இதுக்கு ஒரு

வழி சொல்லணும்?"

"நான் என்னம்மா பண்ண முடியும்? ஆமா இப்ப எவ்வளவும்மா தேவை?"

"25 பவுன் நகைக்கு லட்ச ரூபா பக்கம் தேவை" சந்திராவதி கண்கள் கலங்க நா தழுதழுக்க சொல்லிவிட்டு விசும்பினாள்.

"லட்ச ரூபாயா?" சங்கரநாரயணன் ஒரு திடுக் உணர்வோடு வாய் பிளந்தான். தடுமாற்றத்தோடு வெளியே வந்தான். காத்திருந்த நண்பர்கள் சூழ்ந்து கொண்டனர். சினிமா பாட்டு சப்தம் கூட நின்று போய் ஒரே சலசலப்பு.

"சங்கரா..." கல்யாண சுந்தரம் அழைத்தபடி தோளில் கை போட்டான். சங்கரநாராயணன் கண்ணில் கண்ணீர் தளும்பிற்று."

"என்னப்பா சிக்கல்...?"

"என்னத்தடா சொல்ல... சினிமாலதான் கல்யாண நேரத்துல பிரச்சினை வந்து கல்யாணம் நின்னு பார்த்துருக்கேன். இப்ப என் விட்டுலையே அது நடந்துவிடும் போல இருக்கு..."

"பிரச்சினையை சொல்லு."

"25 பவுன் நகைதான் பிரச்சினை.அதை போட்டா கல்யாணம் இல்லைன்னா கருமாதிதான்"

"வாயைக்கழுவுடா 25 பவுன்தானே... போட்டுடலாம்டா. நாங்கள்ளாம் இருக்கோம்ல"

"என்ன சொல்றே கல்யாண சுந்தரம்? லட்ச ரூபாய்க்கு நீங்க எங்கடா போவீங்க?"

"ஆளுக்கு 25,000 லோன் போட்டு பணம் தரோம். போய் சம்மந்தி அம்மாவை பார்த்து சமாதானம் செய்."

"கல்யாணம் நிஜமாவா சொல்றே?"

"சத்யமாடா... ஆபத்துக்கு உதவாத பணம் ஒரு பணமாடா..."

"ரொம்ப தேங்க்ஸ்டா..."

"அதெல்லாம் அப்புறம். எங்க சம்மந்தியம்மா? வா நாங்களே கேரண்டி கொடுக்கறோம். ஆச்சாரமா இப்பவே

குளத்தில் உப்பிலி எடுத்த அந்த ஒரு பவுன் காசை கொடுத்துட்றோம். வா... வாடான்னா..."

கல்யாணம் சுந்தரம் சங்கரநாராயணனை இழுத்துக் கொண்டு சம்மந்தியம்மாளை தேடிக் கொண்டு போய் எதிரில் நின்றான். அவளோ வெற்றிலையை ஆடு மெல்வது போல் மென்றபடி பட்டுப்புடைவை முந்தானையால் உதட்டை ஒத்தி எடுத்துக் கொண்டு கல்யாண சுந்தரத்தை மிக அலட்சியமாகப் பார்த்தாள்.

"அம்மா தயவு செய்து கல்யாணத்தை நிறுத்திடாதிங்க. அந்த 25 பவுனுக்கு நாங்க கேரண்டி. அதிகபட்சம் எங்களுக்கு 15 நாள் டயம் கொடுங்க. நாங்க 25 பவுன் நகையோட உங்களை பார்க்கறோம். இப்ப கல்யாணம் நடக்கட்டும்."

"இவ்வளவு பேசற நீ யாருப்பா...?"

"நாங்க சங்கரநாராயணனோட நண்பர்கள். அவன் கூட ஒண்ணா வேலை பார்க்கறவங்க."

"அப்ப உங்க சினேகிதனுக்கு உதவி செய்யறதுன்னு முடிவு செய்துட்டீங்க."

"ஆமாம்மா. அதுதானேம்மா நட்பு."

"என்கிட்ட இந்த சினிமா வசனமெல்லாம் வேணாம். நான் இந்த மாதிரி நிறைய பார்த்தவ."

"இது வசனமில்லம்மா. எங்க ஆதங்கம்."

"புடலங்கா... எனக்கு சொன்ன மாதிரி நடந்துக்கிட்டாகணும். இல்லாட்டி நான் பத்ரகாளியா மாறிடுவேன்."

"இந்தாங்கம்மா... இந்த ஒரு பவுன் காசை அச்சாரமா பிடியுங்க. இது போக 24 பவுனுக்கு நான் கேரண்டி.

கல்யாணசுந்தரம் அவள் கையில் குளத்தில் கிடைத்த பொற்காசை வைத்தான். அவள் அதைத் தொட்டுத் தூக்கி ஏராளமான ஆராய்ச்சிகளோடு பார்த்தாள்.

"இதென்ன காசு... பவுனங்கறே என்னமோ மாதிரி இருக்குதே..."

"தங்கம்மா, அசல் தங்கம். போய் உரசிப்பாத்துக்குங்க. மிச்சத்துக்கு நாங்க

பொறுப்பு."

அந்த பெண்மணி பதிலுக்கு அவனை மேலும் கீழும் பார்த்தாள். சரி நம்புகிறேன் என்கிற பாவனை சில விநாடிகளில் முகத்தில் ஓடியது.

"சரி... இனி நடக்கறதாவது குறை இல்லாம நல்லவிதமா நடக்கட்டும்..."

அவள் அப்படிச் சொன்ன ஐந்தாவது நிமிடம் மீண்டும் மேள சப்தம் கேட்க ஆரம்பித்து விட்டது. தொங்கிப்போய் கிடந்த கல்யாண வீட்டு கலகலப்பும் மளமளவென்று பெருகியது. குழாய் ரேடியோவும், "ஒரு பொண்ணு ஒண்ணு நான் பார்த்தேன்...." என்று இந்த நாள் பாட்டுக்கு மாறியிருந்தது...

சந்திராவதி ஓடி வந்தாள். கல்யாண சுந்தரத்தின் ஒவ்வொரு நண்பர்களின் கையையும் பிடித்து கண்ணீரோடு கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"உங்களை எல்லாம் ஒருநாளும் மறக்க மாட்டேன்பா..." என்றாள் விசும்பலோடு.

"போங்கம்மா. போய் கல்யாண காரியத்தைப் பாருங்க."

கல்யாண சுந்தரம் சந்திராவதியை உற்சாகத்தோடு அனுப்பி வைத்தான்.

ழூழூழூ

மாடி அறை.

சீட்டுக் கச்சேரியில் நண்பர்கள்! நடுவில் கொஞ்சமாய் காதை அடைத்தது கொலுசுச் சத்தம்!

கல்யாணசுந்தரம் நிமிர்ந்து பார்த்தான்.

எதிரில் காபிச்செம்போடு அந்த மின்னல் பெண்.

சிலீரென்று ஆகி விட்டது கல்யாணத்துக்கு...

"இந்தாங்க காபி..." என்றபடி அவள் செம்பைக் கீழே வைத்து விட்டு நான்கு தம்பளர்களையும் அருகில் வைத்தாள். பட்டுப்பாவாடை, தாவணி என்று இளமைக் கொடி பிடித்தாள். கூந்தலில் ஏக நீளத்துக்கு மல்லிகைச் சரம் வாசம் கமகமத்தது.

"எப்படியோ... நின்று போக இருந்த கல்யாணத்தை நடக்கற மாதிரி பண்ணி அபிராமி அக்காவுக்கு ஒரு நல்ல வழியை காட்டிட்டீங்க ரொம்ப தேங்க்ஸ்" என்றாள்.

"நீங்க யார்... சங்கரனுக்கு சொந்தமாஃ"

"ஆமாம். சங்கரநாராயணன் என் மாமன் மகன்."

"ரொம்ப சந்தோஷம்..."

கல்யாணம் சுந்தரம் சொன்னபடியே அவளை ஊடுருவினான்.

"மாமன்மகள்னா... அப்ப நீங்க சங்கருக்கு முறைப் பொண்ணா?" சீட்டை மடித்தபடி உப்பிலி நிமிர்ந்தான்.

அவள் தலை வெட்கத்தோடு அசைந்தது. உப்பிலியின். பார்வை உடனே கல்யாண சுந்தரத்தைத்தான் திரும்பிப் பார்த்தது. கல்யாணம் முகத்தில் சட்டென்று தொற்றிக் கொண்டது ஒருவித சலனம்!

"அப்ப நான் வரேன்..." அவள் விலகினாள்.

"கல்யாணம் உன் ஆள் ரிசர்வ் செய்யப்பட்டிருக்காடா. மனசை மாத்திக்கோ. இல்லன்னா அது நல்லதில்லடா."

சுகுமார் மின்னல் வேகத்தில் விஷயத்தை தொட்டான்.

கல்யாண சுந்தரம் பதிலைச் சொல்லாமல் சீட்டைப் பாய் மேல் வைத்து விட்டு எழுந்து நின்றான்.

"என்னடா மனசுக்கு கஷ்டமா இருக்குதா?"

"இருக்காதா பின்னே... அண்ணாத்தே மூஞ்சி போற போக்குலையே தெரியலஃ"

"அட எவண்டாவன்... அவளை முழுசா இரண்டு தடவை கூட பார்க்கல. அதுக்குள்ள காதல் போதை தலைக்கேறி பித்துப் பிடிச்ச மாதிரி ஆயிட்டியே. டேக் இட் ஈஸி மேன். வா வந்து உக்காந்து ஆடு..."

ரமேஷின் அழைப்பு கல்யாண சுந்தரத்தை விரக்தியாக சிரிக்க வைத்தது.

"என்னடா சிரிக்கறே?"

"என்ன பண்ணச் சொல்றே... எனக்கு

எதுலையுமே ராசி இல்லடா"

"அப்படி எத்தனை விஷயத்துல அய்யாவுக்கு ராசி இல்லாம போச்சு. உக்காருடா..."

"உங்களுக்கு சொன்ன புரியாதுடா. எனக்குள்ள என்ன இருக்குன்னு எனக்குதானே தெரியும்?"

"கல்யாண சுந்தரத்திடம் பெருமூச்சு மண்டியது. தொடர்ந்து ஆடப்பிடிக்கவில்லை.

"சரிடா. ஆப்படியே கொஞ்சம் வெளியே சுத்திட்டு வருவோமாஃ"

"ஆமாண்டா... கல்யாணம்னா சீட்டாட்டம்னு ஆக்கிட்டாங்க. நாம அதை மாத்துவோம் குளத்துக்கு போய் குளிச்சுட்டு வந்த மாதிரி வேற எங்கையாவது போய்ட்டு வருவோம்.

இந்த கிராமத்துல போய்ட்டு வர்ற மாதிரி இடம் என்னடா இருக்குது?"

"திரும்ப குளத்துக்கே போனா என்னடா?"

"திரும்பவும் குளத்துக்கா... என்ன உப்பிலி ஒரு தடவை தங்கக் காசு கிடைச்ச உடனே ஆசை வந்துடிச்சா?"

"எதுக்கும் ஒரு முழுக்க போட்டுத்தான் பார்க்கறேனே."

உப்பிலி தன் ஆசைகளை வெளிக்காட்டிய அந்த நொடி, "யாருப்பாது இங்க பட்டணத்துல இருந்து வந்துருக்கறது?" ஒரு கிழட்டுக் குரல் காதில் ஒரு கிழவி நின்று கொண்டிருந்தாள்.

"நாங்கதான்... நீங்க யார் பாட்டி?"

"நான் யாருங்கறது இருக்கட்டும். இதுல சம்மந்தியம்மாவுக்கு அச்சாரமா ஒரு வராகன் கொடுத்தது யாரு?"

கிழவி கொட கொட குரலோடு கேட்ட விதத்தில் பதற்றம் தொனித்தது.

"நான்தான்... ஏன் என்ன விஷயம்?" கல்யாண சுந்தரம் முன்னால் சென்றான்.

"அந்த காசு... அந்தக் காசு உனக்கு ஏது... யார் கொடுத்தா?"

"எதுக்கு கேக்கறீங்க பாட்டி...? முதல்ல உக்காருங்க!"

"உக்கார்றது இருக்கட்டும். அந்தக் காசு

உனக்கு எப்படி கிடைச்சிச்சு அத சொல்லு முதல்ல..."

"எப்படி கிடைச்சிச்சுன்னா... இது என்ன கேள்வி பாட்டி? கடைலதான் வாங்கினேன்."

கல்யாண சுந்தரம் வேண்டுமென்றே பொய் சொல்ல, கிழவி அவனை சுட்டெரித்து விடுவது போல பார்த்தாள்.

"எதுக்கு இப்படி பாக்கறீங்க? அந்த காசுக்கென்ன வந்துச்சு? அதச் சொல்லுங்க..."

"அது... அது... அழகன்பட்டி ஜமீன் இந்த சீமையை ஆண்ட காலத்துல அடிச்ச நாணயம். அது எப்படிடா கடைல கிடைக்கும்? யார்கிட்ட காதுகுத்தறே நீ..."

"அப்ப அது ஜமீன் காசா...?"

"என்னடா... ஒண்ணும் தெரியாத மாதிரி கேக்கறே உண்மையை சொல்லு அது எப்படி உனக்கு கிடைச்சிச்சு."

"எதுக்கு கேக்கறீங்கன்னு நீங்க சொல்லுங்க. அப்புறம் எப்படி கிடைச்சிச்சுன்னு நான் சொல்றேன்."

"நல்லா கேட்டுக்குங்கடா... இந்த மண்ணுல அது புதையலா போய் பலகாலம் ஆயிடிச்சு. அந்த புதையல யார் தொட்டு எடுத்தாலும், அந்த காசு யார்கிட்ட இருந்தாலும் அவங்க நல்லவிதமா உசுரோட இருக்க முடியாது. எட்டு திக்குலையும் அந்த புதையல காவல் காக்கற எங்க ஊர் சாமிங்க உசுரோட விடாது. ஏதாவது மாய மந்திரம் பண்ணி அந்த புதையலை எடுத்திருந்தா எடுத்த இடத்துல போட்டு விட்டு போயிடுங்க. இல்லாட்டி ஊர் எல்லையையே தாண்டமாட்டீங்க..."

பாட்டி ஏராள அதிர்ச்சியை வெகு தாராளமாக மூட்டினாள்.

"என்ன பாட்டி நீங்க... புதையல், எட்டு திக்கு மாய மந்திரம்ன்னு எங்கள பார்த்து என்னென்னவோ சொல்றீங்க. நாங்க மெட்ராஸ்ல ஒரு கம்பெனில 4,500 ரூபா சம்பளத்துல வேலை பார்க்கற சாதாரண கிளார்க்குங்க. இந்த வீட்டு கல்யாணத்துல

கலந்துக்க வந்த இடத்துல உங்க ஊர் குளத்தோட அடி ஆழம் வரை போய் மண்ணு எடுத்துட்டு வரேன்னு சொல்லி உள்ள போனான் இந்த உப்பிலி. இவன் அப்படி எடுத்துட்டு வந்த மண்ணுல அந்த ஒரு காசு இருந்துச்சு! அவ்வளவுதான் எங்களுக்குத் தெரியும். இதுக்குமேல் சத்யமா எனக்கு எதுவும் தெரியாது..."

"அப்ப குளத்துக்குள்ளதான் இருக்கா அந்த புதையல்?"

கிழவி பதிலுக்கு திருப்பி கேட்டு விட்டு பெரிதாக ஆயாசித்தவளாக ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். தொலைதூரத்தில் சக்களத்தி கரடு கண்ணில் பட்டது.

"ஆத்தா சக்களத்தி... என்னை எதுக்காக உசுரோட விட்டு வெச்சிருக்கேன்னு எனக்கு இப்பதாண்டி தெரியுது. நான் பண்ணின பூஜையும் புனஸ்காரமும் வீண் போகலை. அதேபோல உன் புதையலையும் யாரும் கொண்டு போக விடமாட்டேன். கொண்டு போக விடமாட்டேன்"

ஆவளின் புலம்பல் நண்பர்களுக்கு ஆச்சரியமாகிப் போனது.

கிழவி திரும்பவும் அவர்களை ஏறெடுத்தாள்.

"இதுல யார் உப்பிலி?"

"நான்தான் பாட்டி..."

"முதல்ல சக்களத்தி கரட்டுக்கு போய் அங்க சாமியாயிட்ட சக்களத்தி காலடில ஒரு கற்பூரத்தை கொளுத்தி கும்புட்டுட்டு வா... ஓடு..."

"எதுக்கு...?"

"ஏன் எதுக்குன்னெல்லாம் கேக்காதே. நீ உசுரோட இருக்கணும்னா சொன்னதைச் செய்..."

கிழவி அதட்டினாள். வெளியே எங்காவது போய் வர நினைத்த அவர்களுக்கும் இந்த சாக்கில் சக்களத்தி காட்டுக்கு போக ஒரு வாய்ப்பு கிடைத்ததாகவே தோன்றியது.

நால்வரும் கிளம்பினார்கள்.

மாலைச் சூரியன் பார்த்துக் கொண்டிருந்தான்.

## 5

**அந்த விசுவகர்மாவின் பெயர் பெருஞ்சித்திரன். சக்களத்தி கரட்டின் கற்களின் தரத்தைப் பார்த்து அசந்து போய் விட்டான். அவ்வளவும் அற்புதமான ஜாதிக்கற்கள். உளி பட்டால் ஒவ்வொரு கல்லிலும் ஒரு தெய்வம் நிச்சயம் என்றார். தனது சிற்பக் கூடமாக அந்த கரட்டை மாற்றி விட விரும்பி, அதற்காக நாள் பார்க்கத்தான் அவர் குருவராய பண்ணாடியிடம் போனார்.**

**பண்ணாடியும் அங்கே வந்து கோலம் போட்டு அமர்ந்து குறி சொல்ல விரும்பி அங்கே வந்தார். குறியில் ஒரு பானை நிறைய தங்கக் காசுகள் கண்முன்னே தோன்றித் தோன்றி மறையலாயின!**

நான்கு பேரும் மிடுக்காக டிரஸ் பண்ணிக் கொண்டு கல்யாண விட்டுக்கு வெளியே கால் எடுத்து வைக்கவும் ஓடி வந்தான் சங்கரநாராயணன்.

"எங்கடா கிளம்பிட்டீங்கஃ"

"சும்மா ஊரைச் சுத்திப் பார்க்கலாம்னுதான்."

"டேய் எதுக்குடா இவன்கிட்ட மறைக்கறே... சங்கரா அந்த சக்களத்திக் கரட்டுக்குத்தாண்டா போறோம்."

"என்னது... அங்கையா?" அதிர்ந்தான் சங்கரநாராயணன்.

"அங்க என்னடா இருக்கு...? எதுக்கு எல்லாரும் இப்படி அங்கையான்னு கேட்டு அதிர்ச்சியை காட்றீங்க?"

"டேய்... அந்த கிழவி போகச் சொன்னதையும் சொல். அப்பதான் அவனுக்கு தெளிவா புரியும்."

"யாரு வரதாயிப் பாட்டியா...?"

"அதெல்லாம் தெரியாது... ஒரு பாட்டி வந்து

பயங்கரமா எங்கள குழப்பிட்டாங்க. குளத்துல எடுத்த அந்த பொற்காசு கூட புதையல் காசாம். அதை வெச்சிருக்கறவங்க செத்துப் போயிருவாங்களாம். காசு கூடாதுன்னா சக்களத்தி கரட்டுக்குப் போய் அங்க இருக்கற சக்களத்தி சாமி கால்ல விழுந்து கும்புடணுமாம்ல..."

"என்னடா இவ்வளவு நடந்துருக்கு நீங்க எதையும் சொல்லாமலே போறீங்க..."

"நீயே கல்யாண வேலைல அந்த டென்ஷன்ல இருக்கே. பத்தாததுக்கு அங்கமுத்து மாதிரி ஒரு சம்மந்தி. போய் அவங்கள கவனி. நாங்க போய்ட்டு வந்துட்றோம்."

"பாட்டி சொன்னதைக் கேட்டு நம்பி பயந்து போய் அங்க போறதா மட்டும் நினைச்சுடாதே. எங்களுக்கே அங்க போய் பார்க்கணும்னு ஒரு ஆசை. ஒரு கிராமம்னா இப்படி பல முட்டாள்தானமான பல நம்பிக்கைகள் இருக்கத்தான் செய்யும்கறது எங்களுக்கு தெரியாதா என்ன?"

"சரிடா வளவளன்னு பேசிகிட்டு... சங்கரா நீ போ. நாங்க ஒரு மணி நேரத்துல வந்துடறோம்."

நண்பர்கள் சங்கரநாராயணனை தட்டிக் கொடுத்து விட்டு நகர்ந்தனர். சங்கரநாரயணனுக்கு நெஞ்சை அடைத்தது.

"டேய் வேண்டாம்டா..." என்று சொல்ல வாயெடுத்தவன், என்ன இது நாமளும் ரொம்ப பயப்படறோம். எல்லாம் முட்டாள்தனம்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு திரும்பினான்.

எதிரில் வரதாயி பாட்டி.

பாட்டி நெருங்கி வந்தாள்.

"உன் சினேகிதங்க போயிட்டாங்களா...?"

இப்பதான் போறாங்க. நீங்கதான் போகச் சொன்னீங்கன்னாங்க?"

"ஆமாம். உன் சினேகிதப் பசங்க இருக்கணும்ல...ஃ"

"என்ன பாட்டி நீ... சுடுகாடுன்னா பேயுங்க. ஒத்தைப் பனமரம்னா முனிசாமின்னு ரீல் விட்ட காலமெல்லாம் மலை ஏறிப் போயிடிச்சு பாட்டி... பட்டணத்துல ஊருக்குள்ளயே பள்ளிக் கூட மைதானம் மாதிரி சுடுகாடுங்க வந்து பேயும் கிடையாது பிசாசும் கிடையாதுன்னு உலகம் புரிஞ்சுகிச்சு அந்த மாதிரிதான் நம்ம சக்களத்தி கரடு சமாச்சாரமும்... ஆனா உன்னை மாதிரி கிழவிங்கள் உசுரோட இருந்துகிட்டு பழைய கதைகள் சொல்லி எங்களை எல்லாம் பயத்துலைலேயே வைக்கப் பாக்கறீங்க..."

சங்கரநாராயணனின் சலிப்பு வரதாயிப் பாட்டி முகத்தில் முறைப்பை உருவாக்கிற்று.

"எலேய்... நாளைக்கு இதே நேரம் நான் சொல்றதெல்லாம் உண்மைன்னு நீ நம்புவடா. அப்ப தெரியும் உனக்கு" என்றாள்.

"நாளைக்கு சாயந்தரத்துக்குள்ள அப்படி என்ன நடந்துடும்?"

வரதாயி பாட்டி பதில் சொல்லவில்லை. பேசாமல் திரும்பி ஒரு உலுக்கு உலுக்கி எடுத்த சம்பந்தி அம்மாளை மட்டும் ஒரு பார்வை பார்த்து விட்டு நடந்தாள்.

"எங்க கிளம்பிட்டே.... இருந்து மாப்ளை அழைப்பு முடிஞ்சு சாப்ட்டுட்டுப் போ.

"எல்லாம் எனக்கு தெரியும்டா..."

கிழவியின் கால்கள் குளத்தங்கரையை நோக்கி நடைபோட்டன.

சங்கரநாராயணனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

ழூழூழூ

கப்பிச் சாலையில் அங்காங்கே மழை நீர்த்தேக்கம் அதில் பச்சைத் தவளைகள் வாயைப் பிளந்தபடி பாய்கின்றன. தாண்டித் தாண்டி நடந்து கொண்டிருந்தனர் நண்பர்கள். வயல்வெளி மேல் கன்னிப் பெண்ணைத் தழுவுகிறார் போன்ற காற்று ஜிலுஜிலு வென்றிருந்தது.

"என்ன சொல்லு கிராமம் கிராமம்தான்" என்று ரசித்தபடி சிலாகித்தான்

கல்யாணசுந்தரம். கல்யாண வீட்டை விட்டு வெகுதூரம் வந்து விட்டது. தேய்ந்து போய் காதில் விழும், வத்திக்குச்சி பத்திக்காதுடா. யாரும் வந்து உரசற வரையில என்கிற பாட்டாலே தெரிந்து போயிற்று.

"பரவால்லடா. ஒரு எம்.ஜி.ஆர். பாட்டு ஒரு அஜீத் பாட்டுன்னு அந்த காலத்தையும் இந்த காலத்தையும் அழகாவே பேலன்ஸ் பண்றாங்கடா" என்று உப்பிலியும் தன் பங்குக்கு அரட்டையை ஆரம்பித்தான்.

"நீ ஒண்ணு கவனிச்சியா கல்யாணம். பேருக்கு நடுவுல ஜி வர்ற எல்லாருமே சினிமா இண்டஸ்ட்ரில பெரிய ஆளாயிட்றாங்க இல்ல..."

இது சுகுமார்.

"இது என்னடா புதுக்கதை... அப்படி யாரெல்லாம் ஆயிருக்காங்க?"

"எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், ரஜினிகாந்த், அஜீத்..."

"ஏண்டா விஜி மட்டும் தற்கொலை பண்ணிக்கிச்சு?"

"இதோ பார் நான் நடிகர்களுக்குத்தான் சொன்னேன். நடிகைகளுக்கு சொல்லலை."

"ஆ...இப்படி ஒரு கதையாக்கும். சுகு நீ பேசாம புரோனாலஜிங்கற பேர் ராசி ஜோசியம் பாக்க ஆரம்பிச்சிடுடா. காசை அள்ளிடலாம்."

"என்ன கிண்டலா? பேருக்கு வாழ்க்கைல முன்னுக்கு வர்றதுக்கும் நிறைய தொடர்பு இருக்குன்னுதான் நான் நினைக்கிறேன். ராங்கற பேர்ல ஆரம்பிக்கற எல்லாருமே சினிமா இண்டஸ்ட்ரீல நல்லா சக்ஸஸ் பண்ணியிருக்காங்க தெரியுமா?"

"டேய் வேணாம்டா... விட்டுட்றா இந்த மாதிரி ஆராய்ச்சியெல்லாம் லாட்ஜ்ல ரூம் போட்டுக்கற ஜோசியர்கள் பண்ணட்டும். நமக்கு வேண்டாம்டா." நண்பர்கள் கலகலப்பான பேச்சோடு சக்களத்திக் கரட்டை சமீபித்திருந்தனர்.

"அதென்னடா சக்களத்தி கரடுன்னு பேர்

வெச்சிருக்காங்க யாருடா அது சக்களத்தி?"

"சக்களத்தின்னா அர்த்தம் தெரியும்ல. இந்த ஊர்ல இல்ல அக்கம் பக்கத்துல யாருக்காவது ரெண்டாவது பொண்டாட்டி இருந்துருக்கணும். முத பொண்டாட்டி கொடுமை தாங்காம அவ இந்த கரட்டுக்கு வந்து கொலை செய்துகிட்டிருக்கணும். நீ வேணா கேட்டுப்பார். இப்படித்தான் ஏதாவது கதை இருக்கும்."

"ஓஹோ அதனாலதான் சக்களத்தி கரட்டுங்கறாங்களோ?"

"பின்னே...?" ஒருவருக்கொருவர் கேள்வியும் பதிலுமாக கப்பிச்சாலையில் இருந்து இறங்கி கரடு நோக்கி பிரியும் ஒற்றையடித் தடத்தில் இறங்கினார்கள்.

கரட்டின் சிற்பங்கள் சமீபத்தில் கம்பீரமாகத் தெரிந்தன.

"எவனோ வேலைமெனக்கெட்டு எல்லாத்தையும் செதுக்கிட்டு பாதியில விட்டுட்டு போயிருக்கான் பார்..." ஒரு பாறையில் யானை முகம் மட்டும் தெரிய, அதைப் பார்த்தபடியே கமண்ட் அடித்தான் கல்யாணம்.

தொட்டுத் தொட்டு கரட்டின் முன்னாள் வரை போய் விட்டனர்.

"ஏது யாரது?" கப்பிச் சாலையில் இருந்து ஒரு குரல். களப்பையை தோளில் போட்டுக் கொண்டு நிற்கும் ஒருவர்தான் கத்தியவர்.

"எதுக்கு கேக்கறீங்க?" பதில் கேள்வி திரும்பி அவரைத் தாக்கியது.

"அங்கல்லாம் போகாதீங்க... வந்துடுங்க. ஆபத்து."

"பொடலாங்கா... போய்யா உன் வேலையைப் பார்த்துகிட்டு."

"ஏய் ரமேஷ் எதுக்குடா இப்பிடி மூஞ்சில அடிச்ச மாதிரி பதில் சொல்றே... பெரியவரே! எல்லாம் தெரிஞ்சு தான் வந்துருக்கோம். நீங்க போங்க, நாங்க பார்த்துக்கறோம்."

கல்யாணசுந்தரம் அவரை சமாளித்து அனுப்பி விட்டு கரட்டை ஊன்றிப் பார்த்தான்.

கிட்டதட்ட இருநூறு மீட்டர் நீளம் இருக்கும். எல்.ஐ.சி. அளவு உயரம்! அங்கும் இங்குமா திண்டு திண்டாக இரண்டு யாணை சைசுக்கு பாறைகள்.

நின்று கொண்டிருக்கும் பாதைத்தடம் கரட்டினுள் குகை போன்ற ஒரு பரப்பை நோக்கிப் போயிருந்தது. அதில் நடந்து செல்லும்போது அங்கங்கே குங்குமம் தோய்த்த எலுமிச்சைத் துண்டுகள் கண்ணில் பட்டன.

"கல்யாணம் என்னடா இது... யாரோ திருஷ்டி கழிச்சு தூக்கி எறிஞ்சமாதிரி ..."

"அதானே... யாராவது வந்து அந்த மாதிரி காரியம் எதையாவது பண்ணிட்டு போயிருக்காங்களோ என்னவோ?"

"சரி சரி வா.. அங்க பார் பாவை விளக்கு சிற்பம் பியூட்டிஃபுல்லா இல்லை?"

"ஆமாண்டா அந்த சிங்கச் சிலை கூட சூப்பரா இருக்குது பார்..."

நடந்தபடியே உள்ளே போனார்கள். காலை நிரடியது சரளைக்கற்கள். அதில் சிலவற்றை எடுத்து வீசி எறிந்தபடியே சுற்றிப் பார்த்தான் ரமேஷ்.

"பேசாம வாடா... கல்லைப் பார்த்தா எடுத்த எறியணுமாக்கும். கையை வெச்சுகிட்டு சும்மா இருக்க முடியாதாக்கும்?"

"விட்றா... அவன் என்னிக்கு பேச்சை கேட்டிருக்கான்..."

"டேய் சக்களத்தி சாமி சன்னதி எங்க இருக்குன்னு பாருங்கடா. உப்பிலி ரெடியா இருடா. நீதான் கற்பூரம் ஏத்தி வெச்சு சாமி கும்பிடணும்.

"முதல்ல சாமிய கண்டுபிடிங்க. அப்புறமா கும்பிட்றது பத்தி யோசிக்கலாம்."

உப்பிலி எளக்கார பதிலோடு அவனும் ஒரு கல்லை எடுத்து கரட்டு உச்சி நோக்கி எறிந்தான். விர்ரென்று பறந்து சென்ற அது கண்ணை விட்டு மறைந்த நொடி "அம்மா..." என்று ஒரு குரல்.

நால்வருக்கும் கொஞ்சம் போல பகீரென்று.

"டேய் யாருடா அது?"

"தெரியலடா..." மிரண்ட விழிகளுடன் நாலாபுறமும் பார்த்தார்கள் போய் விழுந்த திக்கில் கொஞ்சம் போல காராமணிப் புதர். அதை விலக்கிக் கொண்டு ஒரு தாடியும் மீசையுமாக முகம் தெரிந்தது.

பார்த்த நொடி நெஞ்சைப் பிசைந்தாலும் சமாளித்த நால்வரையும் அந்த முகம் வெறித்துப் பார்த்தது.

சில நொடிகள்தான்...

"வாங்க இங்க...?" என்கிற அழைப்பு.

"நாலுபேரும் இங்க வாங்க..." அந்த குரலில் அதட்டல்.

"ஏன் வர முடியாது?"

"பதிலுக்கு பதில்னு கேட்காம இங்க வாங்க. நீங்க வருவீங்கன்னு எனக்கு தெரியும்."

அந்த தாடி மூஞ்சிக்காரர் வயிற்றில் புது விதமாக புளியைக் கரைத்தார்.

"டேய் போய் பார்க்கலாமா...?"

"எவனாவது மந்திரவாதியா இருந்து வெச்சாஃ"

"டேய் மந்திரவாதிங்கல்லாம் தெலுங்கு டப்பிங் சினிமாவுல நடிக்கவும், டி.வி. சீரியல்ல நடிக்கவும் போயிட்டாங்கடா. நடங்கடா டேய் பார்ப்போம்."

கல்யாணசுந்தரம் தைரியமாக நடந்தான். மூவரும் அவனை ஒத்திப் பின் தொடர்ந்தார்கள்.

நெருங்க நெருங்க அந்த மனிதர் புதருக்கு அப்பால் உள்ள ஒரு சமதளம் போன்ற இடத்தில் இருப்பது போல் தோன்றியது.

பக்கமாகவே சென்று விட்ட போது தூக்கி அடித்தது... அவருக்கு ஒரு காலும் ஒரு கையும் இல்லை! நால்வரும் சுற்றி நின்று கொண்டு அவரை திகைப்போடு பார்த்தனர்.

"என்ன பாக்கறீங்க.. உங்க கல் பட்டு காயமாயிடிச்சு தெரியுமா?" அவர் தோள்பட்டையை காட்டினார். அதில் லேசான ரத்தத் தீற்றலோடு பெரிய வெங்காயம் அளவு

வீக்கம்.

"சாரிங்க... ஆமாம் நீங்க யார்? இங்க என்ன பண்றீங்க?"

"என் இடத்துக்கு வந்து என்னைப் பார்த்து கேக்கறீங்களா? உங்கள பத்தி முதல்ல சொல்லுங்க."

"நாங்க... நாங்க... பரிமேலழகன் பட்டில இருக்கற எண் நண்பன் வீட்டு கல்யாணத்துக்கு வந்தோம். வந்த இடத்துல..."

"இந்த இடத்தைப் பற்றி கேள்விப்பட்டு பாக்க வந்தீங்களா?"

"ஆமா..."

"யாரும் போக வேண்டாம்னு சொல்லலையா?"

"சொல்லலையாவா.. சரிதான். இங்க போனா நடக்கக் கூடாததெல்லாம் நடந்துரும்கற மாதிரி சொல்லி மிரட்டிட்டாங்க..."

"ஆனாலும் நீங்க வந்திருக்கீங்களே..."

"நாங்க சிட்டில இருக்கறவங்க. படிச்சவங்க. எதுக்கு பயப்படணும், எதுக்குப் பயப்படக்கூடாதுன்னு எங்களுக்கு தெரியும்."

"அது சரி... இங்க இப்படி கால் கை இல்லாத நீங்க என்ன பண்றீங்க? உங்களை இந்த இடத்துல என்னால நினைச்சே பார்க்க முடியலை."

"நான் இந்த சக்களத்தி கரட்டுக்கு காவல்காரன். ஆனா மனுஷங்களோட பேசிதான் பலப் பல வருஷமாயிடிச்சு."

"யாரும் இங்க வராததாலையா?"

"வந்தாலும் நான் கண்ல படணுமே."

"என்ன சொல்றீங்க நீங்க...? புரியலே."

"அதானே... அந்த வரதாயி கிழவி மாதிரியே இவரும் புதிர் போடறாரே. அது சரி இங்க எப்படி இருக்கீங்க? சாப்பாடு, குளியல் எல்லாம்..."

"அதெல்லாம் இருக்கட்டும். வரதாயி கிழவி என்ன சொன்னா?"

"என்னென்னவோ சொன்னாங்க. இங்க சக்களத்தின்னு ஒரு சாமி இருக்காமே. அதை

நான் கும்பிடணுமாம். இல்லாட்டி ஆபத்தாம்."

"ஆபத்தா...? நீ என்ன தப்பு பண்ணினே?"

"ஒரு தப்பும் பண்ணலை. ஊர் குளத்தில் ஒரு பவுன் தங்க காசு கிடைச்சிச்சு. எல்லாம் அதால வந்த வினை."

"என்னது... ஊர் குளத்துல பொற்காசா...?"

"ஆமாம். அதைப் போய் புதையல் மாதிரி நினைச்சுகிட்டு பேசிச்சு அந்த கிழவி.

"யார்... யார். கைல அது கிடைச்சிச்சுஃ"

"ஏன் இப்படி டெம்ப்ட் ஆறீங்க. என் கைலதான்" உப்பிலி முன்னால் சென்றான்.

"ஆச்சரியமா இருக்கே.... பைரவன் உன்னை ஒண்ணும் பண்ணலையா?"

"அது யார் பைரவன்?"

## 6

**பெருஞ்சித்திரனார் கரட்டை சுற்றி குடிசைப் போட்டுக் கொண்டு தங்கத் தொடங்கி விட்டார். அவரது ஒரே மகள் மேகலையும் அப்பாவுடனே வந்து தங்கினாள். மேகலை சத்தியமாக பளிங்கில் செதுக்கிய பதுமை. குரட்டுப் பக்கமாக சித்திரனார் சிற்பம் செய்வதைப் பார்க்க வந்த பரிமேலழகன்பட்டி ஜமீன்தார் ரங்கதுரைக்கு மேகலையைப் பார்த்த நொடி அவளோடு சந்தோஷிக்க வேண்டும் என்னும் அளவு ஆசை கொழுந்து விடத் தொடங்கிவிட்டது!**

கல்யாண வீட்டில் முதல் பந்தி முடிந்து விட்டது. சாப்பிட்ட இலைகளை எடுத்துக் கொண்டு போய் வீதி முக்கில் குப்பைத் தொட்டியை ஒட்டிப் போட்டுவிட்டு திரும்பினாள் ஒரு வேலைக்காரப் பெண்.

தொட்டியில் விழுந்த இலைகளை நோக்கி ஒரு நாய்க் கூட்டமே பாய்ந்து வரத் தொடங்கியது.

அதில் அடர்வான கருப்பில் இருந்த ஒரு நாய் மட்டும் கிட்டே வந்து எச்சில் இலை என்று

தெரிந்த மாதிரி முகர்ந்து பார்த்துவிட்டு ஒதுங்கிக் கொண்டது.

மேள சப்தம் கேட்கும் கல்யாண வீட்டு முன்னால் போய் நின்ற அது, உள்ளே ஒரு பார்வை பார்த்துவிட்டு திரும்பிய போது எதிரில் நண்பர்கள் நான்கு பேரும் வந்து கொண்டிருந்தார்கள்.

"கடைசி வரை அந்த சக்களத்தி சாமியை கும்புடாம அழிச்சாட்டியமாக இருந்துட்டியோடா உப்பிலி..."

"எவண்டாவன்... பாக்கற கல்லு சிலையை எல்லாம் கும்புட முடியுமாடா?"

"அப்ப கிழவி கேட்டா என்ன சொல்வே...ஃ"

"கேட்கும் போது பார்த்துக்கலாம்..."

"அந்த மாறுகால் மாறுகை தாடிக்காரன் ஒருத்தன் எப்படித்தான் அங்க இருக்கானோஃ"

"மூவரின் பேச்சிலும் அங்கு நடந்தவைகளின் விலாவரி.

கறுப்பு நாயின் பார்வை மட்டும் நண்பர்களில் உப்பிலியின் மேலேயே... அதை சுகுமார் கூட பார்த்தான்.

"உப்பிலி அங்க பாருடா ஒரு நாயை... மர்ம தேசம் டி.வி. சீரியல்ல வர்ற நாய் மாதிரியே இல்ல?"

"தெருவுக்கு ஆயிரம் நாய் இருக்கும். இப்ப எதுக்கு நாயை காட்றே...?"

"பைரவண்டா... உன்னை கடிச்சுக் குதறப் போற பைரவன். அந்த மாறுகால் மாறுகை தாடிக்காரன் கிட்டதட்ட அப்படித்தானே சொன்னான்?"

ரமேஷ் கிண்டல் செய்தான்.

"பேசாம வாடா... முதல் பந்தி முடிஞ்சுட்ட மாதிரி தெரியுது. சங்கரன் பார்த்தா கத்துவான்.

பேச்சோடு நெருங்கினவர்களில் உப்பிலி மட்டும் விளையாட்டாக, நிற்கும் நாயைப் பார்த்து...

"ஹாய் பைரவன்" என்று கையை ஆட்டினான். அடுத்த நொடி அதனிடம் ஒரு

அசுரப் பாய்ச்சல்.

ஆ!

## 7

**தஞ்சாவூரைச் சுற்றிலும் கிட்டத்தட்ட பதினெட்டு பெருநாடுகள். ஐம்பத்தி நான்கு நடு நாடுகள், நூற்றி எட்டு கிராமங்கள்!**

**இதில் சரபோஜி அரசரால் போஷிக்கப்பட்ட வள்ளுவர்களில் குருவராய பண்ணாடியும் ஒருவர். பண்ணாடி ஜனித்த அன்று வான மண்டலத்தில் ஞானகாரனாகிய கேதுவும், கணிதப் பிதாவான புதனும், இவர்களை சப்தமத்தில் இருந்து குருவும் பார்த்த நிலையில் மனோகாரகனான சந்திரனும் வீடு மாறி கேதுவுடன், புதனுடனும் இணைந்து கொண்டனராம். இப்படி ஒரு அமைப்பில் பூர்வபுண்யாதிபதியும் வலுவுடன் இருந்ததனால் பண்ணாடியால் காலக்கணக்கை அறுதியிட்டு சொல்ல முடிந்தது. சொன்ன அவ்வளவும் அப்படியே நடந்தது. அப்படிப்பட்ட பண்ணாடிதான் கூறினார். ஆழகன் பட்டியில் ஜமீனுக்கு சொந்தமான தங்கப்புதையல் இருக்கிறது அதை அஷ்டத்திக்கும் காவல் தெய்வங்கள் காவல் காக்கின்றனர் என்று...'**

நாயின் பாய்ச்சல் உப்பிலியை அலறவிட்டது. நண்பர்கள் சிதறிப் போனார்கள். தடுக்கப் பார்த்த வலது கை மணிக்கட்டில் இருந்து உள்ளங்கையில் தேங்குமளவு சதையை அந்த நாய் கவ்விப் பிடித்தது. ஒரு புலியைப் போல அந்த மாமிசத்தை விழுங்கவும் செய்தது. உப்பிலி கிடுகிடுத்துப் போய் பின்னால் விழுந்தான். ரமேஷ் ஒரு கல்லை எடுத்து அந்த நாயை நோக்கி எறிந்தான். அது சில அடிகள் பின்னால் சென்றுவிட்டு திரும்பவும்

பாய்ச்சலுக்கு தயாரான போது கல்யாண வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலர் எழுந்து ஓடி வந்தனர்.

கல்யாண சுந்தரமும் சுகுமாரும் பந்தலில் இருந்த ஒரு கம்பை ஒடித்துக் கொண்டு நாயை அடிக்கத் தயாராகினர்.

அதுவும் இனி பாச்சா பலிக்காது என்பது புரிந்து திரும்பி ஓடியது.

உப்பிலி கையில் ரத்தம் சொட்டச் சொட்ட எழுந்து நின்றான். ஏதோ பைப்பை திறந்து விட்டது போல ரத்தம் கொட்டு கொட்டென்று கொட்டியது.

"அடடடா... முதல்ல ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்கப்பா. கருநாய்க் கடிங்கறது சாதாரண விஷயமில்லை ஓடுங்க..."

கூட்டத்தில் ஒருவர் குரல் கொடுத்தார். சங்கரநாராயணனும் அங்கு வந்து உப்பிலியைப் பார்த்து பதறத் தொடங்கினான்.

நல்லவேலையாக ஒரு கோஷ்டி டிராக்டரில் கல்யாணத்திற்கு வந்திருந்தது. அதன் ட்ரெய்லரில் உப்பிலியை தூக்கிப் போட்டு நண்பர்களும் ஏறிக் கொண்டனர். உடன் வரப் பார்த்த சங்கரநாராயணனை வர வேண்டாம் என்று சொல்லிவிட்டனர். டிராக்டரும் தனது அசுரச் சக்கரங்களை உருட்டிக் கொண்டு ஓட ஆரம்பித்தது. வீதி வளைவில் குளத்தங்கரையில் முன்பு பார்த்த பெரியவர் நின்று கொண்டிருந்தார்!

'பைரவசாமி விடாதுன்னேன். சரியாயிடுச்சு" என்று பலமாகவே முணுமுணுத்தார். அதைக் கேட்டு நண்பர்கள் மூன்று பேருமே விசுக்கென்று திரும்பிப் பார்த்தனர். டிராக்டர் ட்ரெய்லரில் கையைச் சுற்றி துணிக்கட்டோடு படுத்திருந்த உப்பிலியை மடிமேல் போட்டுக் கொண்டிருந்தான் சுகுமார் அவன் காதிலும் அந்தக் குரல் விழுந்தது. குதித்துக் குதித்து ட்ராக்டர் ஓடும்போது உப்பிலியின் தலை தூக்கித் தூக்கி போட்டது. உப்பிலியும் வலி தாளாமல் முனங்கிக் கொண்டிருந்தான்.

பெரியவர் கருத்தோடு உப்பிலியைப் பார்க்க, நண்பர்கள் மூன்று பேருக்குமே உப்பிலி பரிதாபமாகத்தான் தெரிந்தான்.

"கல்யாணம்... அந்த பெரியவர் சொன்னதைக் கேட்டியா?"

"அது பத்திதான் யோசிச்சுக்கிட்டிருக்கேன். அவர் சொன்னதுதான் உண்மையா, இல்லை காக்கா உட்கார பனம் பழம் விழுந்திடிச்சாடா?"

"கடைசியா சொன்னதுதான் கரெக்ட். நாம ரொம்ப தான் அலட்டிக்கிறோம்... தெருவுன்னு இருந்தா தெரு நாய்கள்னும் இருக்கும். அதுங்க ஆளுங்கள கடிக்கறது சகஜம்தானேடா?"

ட்ராக்டர் கப்பிச் சாலையில் குத்தித்தபடி ஓடிக் கொண்டிருக்க, நண்பர்கள் மூன்று பேரிடமும் மாறி மாறி கருத்துக்கள் மோதிக் கொண்டன.

"எதுக்கும் இவன் அந்த பாட்டி சொன்ன மாதிரி சக்களத்தி கரட்டுல அந்த சாமியை கும்பிட்டிருக்கலாம். கல் சிலையையெல்லாம் கும்புட நான் ஒண்ணும் முட்டாப்பய இல்லைன்னு வீராப்பா சொன்னான். இப்ப இப்படி நாய்கடி பட்டு படுத்துக் கிடக்கறான்" என்று ரமேஷ் கொஞ்சம் போவ கட்சி மாறினான்.

"டேய் பக்கமா பேசுடா... அவன் சொன்னதுல என்ன தப்புடா? என் மாமா வீடு தெருவுல ஒரு மூளைல இருக்கு. அங்க எப்பவும் இருட்டா இருக்கும். போற வர்றவங்க அதனால அங்க நின்று ஒண்ணுக்கடிச்சிட்டு போயிடுவாங்க. இதை தவிர்க்க மாமா ஒரு வழி பண்ணுவார். அங்க ஒரு பிள்ளையார் சிலையை வெச்சு சின்னதா ஒரு லைட்டும் போட்டார். இப்ப யாரும் அங்க ஒண்ணுக்கு போறதில்ல. அவ்வளவுதான் இதுக்காக அந்த சிலைதான் பிள்ளையார்னு யாரும் விழுந்து கும்புட்றதில்லை. அது ஒரு சைகலாஜிகல் ட்ரீட்மெண்ட். அந்த மாதிரிதான் இந்த சிலை விஷயமும். யாரோ சக்களத்தியாம். ஆவ

சாமியாயிட்டாளாம். அவளை நாம கும்புடலைன்னா அது ஆபத்துன்னா கேக்க நல்லாவா இருக்கு?"

கல்யாணம் சுந்தரம் கைகளை ஆட்டி ஆட்டி பேசியது கேட்க நன்றாகத்தான் இருந்தது. இருந்தாலும் உள்ளூர சின்னதாக ஒரு குட்டி நெருடல். டீராக்டரும் சாலையின் போக்கில் சக்களத்திக் கரட்டை நெருங்கிவிட்ட நிலையில் வேகத்தை குறைத்துக் கெண்டிருந்தது. ட்ராக்டர் டிரைவர் வண்டியை சாலை ஓரமாக நிறுத்திவிட்டுக் கீழே குதித்தான். சாலை ஓரமாக இடுப்புயரத்திற்கு ஒரு கருங்கல்தூண். அதன் மேல், இடுப்பிலிருந்து கற்பூரத்தை எடுத்து வைத்துக் கொளுத்தியவன். நேராகத் தெரிந்த சக்களத்தி கரட்டை பார்த்து கன்னத்தில் படபடவென்று போட்டுக் கொண்டான். அதன் பின் திரும்பி வந்து ட்ராக்டரைக் கிளப்பினான்.

நண்பர்கள் ஆச்சரியமாக பார்த்தனர். "எதுக்கு இப்படி கற்பூரம் கொளுத்தறீங்க?"

"எங்க அழகன்பட்டிய விட்டு யார் மருத்துவர் வூட்டுக்கு போனாலும் சக்களத்தி கரட்டையும் வேண்டிக்குவோம். அப்படி வேண்டிக்காம போனா அவ கோபம் உசுரை வாங்கிடும்கறது எங்க ஊர் நம்பிக்கை" என்ற அவன், கியரை மாற்றி ட்ராக்டரின் வேகத்தைக் கூட்டினான். சில நிமிடங்களில் சாலையில் எதிரே ஒருவன் நின்று கொண்டு கையை நீட்டி டிராக்டரை மறித்தான்.

ட்ராக்டரும் அவனை ஒட்டி நின்றது.

"யாராப்பா அது?"

"அதுவா இப்ப முக்கியம். நான் டவுனு பக்கம் போகணும். ட்ராக்டரு இப்ப டவுனு பக்கம்தானே போகுதுஃ"

"ஆமா... ஆனா யார்னு சொல்லாட்டி வண்டில ஏத்தமாட்டேன்."

"அடப்பாவி... என்னத் தெரியலியா? நான்தான் காப்பாளி கந்தன் மகன் கணபதி."

"இதை முந்தியே சொல்றதுக்கென்ன...?

வண்டியில ஏறு."

அந்த நபர் போர்வையை சுற்றிக் கொண்டு தெருப் பிச்சைக்காரன் போல இருந்தான். இருட்டில் முகம் சரியாகத் தெரியவில்லை. ட்ராக்டர் ட்ரெய்லரில் தாவி ஏறினான்.

ட்ராக்டருக்குள் படுத்தபடி இருந்த உப்பிலியைப் பார்த்தவன், "யாருக்கு என்ன உடம்பு?" என்று கேட்ட படி ஒரு பீடியை கொளுத்தினான். தீக்குச்சியை உரசி பீடித் தலையில் வைக்கும் போது வெளிச்சத்தில் அவன் முகத்தை பார்க்க முடிந்தது. கல்யாண சுந்தருத்துக்கும் மற்றவர்களுக்கும் பகீர் என்றது! சில மணி நேரங்களுக்கு முன்னாள் சக்களத்தி காட்டில் ஒரு காலும் ஒரு கையும் இன்றி பார்த்த அதே மனிதன்.

"சுகுமார்... சுகுமார்..." கல்யாண சுந்தரம் சுகுமாரின் காதைக் கடிக்க, அவன் ரமேஷின் காதில் மிரண்டு போய் சொல்லிக் கொண்டிருந்தான்.

"ரமேஷ் அந்த மாறுகால் மாறுகை பார்ட்டிடா..."

"ஆமாண்டா... நானும் அதைத்தான் யோசிக்கிறேன்."

"இது எப்படிடா சாத்தியம்... எதுக்கும் நல்லா பார்ப்போம்."

மூவரும் புகையைக் கக்கும் அவனைப் பார்த்தனர். முகம் இருளில் சுமாராகத்தான் தெரிந்தது.

"உங்கள்த்தான் கேட்டேன். என்னாச்சு இவருக்கு?" இது அவன்.

"நாய்க்கடிச்சிடிச்சு..."

"என்ன தப்பு பண்ணீங்க?" எதிர்பாராத அவனுடைய பதில் கேள்வி மூவரையும் ஒரு நொடி நாக்கை மடித்து விட்டது.

ட்ராக்டர் எகிறிக் குதித்தபடி ஜிங்கு ஜிங்கு என்று ஓடிக் கொண்டிருந்தது.

"நாங்க ஒரு தப்பும் பண்ணலை... ஆமா நாய்க்கடிக்கும் தப்புக்கும் என்ன சம்பந்தம்?"

"அழகன் பட்டியைப் பொருத்தமட்டுல

அதுக்கு ஆயிரம் அர்த்தம் உண்டு. தப்பு பண்ணாம நாய் அங்க யாரையும் கடிக்கவே கடிக்காது."

"அது சரி நீங்க யார்?"

"நானா... சொன்னேனே காதுல விழலை? காப்பாளி கந்தன் மகன் கணபதி."

"உங்களை அந்த சக்களத்தி கரட்டுல பார்த்தோமே...? அதுவும் காலும் கையும் இல்லாம..."

"அப்ப கரட்டுக்கு வந்தீங்களா நீங்க?..."

"வந்தீங்களாவா... எங்களை நிஜமாலுமே தெரியலையா?"

கல்யாண சுந்தரம் அழுத்தமாக கேட்டதைத் தொடர்ந்து, "வண்டியை நிறுத்து" என்று கத்தினான் அவன்.

ட்ராக்டர் டிரைவர் பிரேக் அடித்து நிறுத்தினான். ட்ராக்டரில் இருந்து குதித்தவன் மூவரையும் ஒரு மாதிரி பார்த்து சிரித்தான். ட்ராக்டர் புறப்பட்டது. கடைசி வரை அவனிடம் இருந்து பதில் இல்லை. நண்பர்கள் மூன்று பேரும் விக்கித்து போனதுதான் மிச்சம். ஒருவேளை அந்த மாறுகால் மாறுகை இல்லாத மனிதனின் உடன் பிறந்தவனா?

## 8

**அழகன்பட்டி புதையலைத் தேடி யார் யாரோ வரத் தொடங்கினார்கள். ஒருகாலத்தில் ஊரே திமிலோகப்பட்டது. எங்கு பார்த்தாலும் குழிகள் தான். விவசாய நிலங்களில் கூட பயிர் நடவுவேலை நடைபெறவில்லை. புதையல் வேட்டைதான்!'**

ட்ராக்டர் ஒரு குடிசையின் முன்னாள் நின்றது. வெளியில் விஷகடிக்கு மந்திரிக்கப்படும் என்னும் போரிட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

கல்யாண சுந்தரம் அதைப் பார்த்து விட்டு கையை சுண்டினான்.

"ஹலோ... டாக்டர்கிட்ட போகணுங்க. நீங்க என்ன மந்திரிக்கற இடத்துக்கு வந்துருக்கீங்க?"

"எல்லாம் தெரியும். பேசாம இறங்குங்க."

டீரைவரின் பதிலில் கொஞ்சம் போல தெனாவெட்டு.

"தெரியுமாவா... நாய்க்கடிங்கறது எவ்வளவு டேஞ்சரான விஷயம் தெரியுமா? மந்திரிக்கறதுக்கு இது என்ன தேள் கடியா?"

ரமேஷ் எகிறும்போது ஒருவர் தலை வெளியில் தெரிந்தது.

"என்ன சத்தம்?"

"வணக்கம் வைத்யரே. ஒரு நாய்க்கடி கேஸ்..."

"உள்ள தூக்கிட்டு வாங்க..." என்ற அவர் குடிசைக்குள் திரும்பினார். கல்யாண சுந்தரமும் சுகுமாரும் ரமேஷீம் கொஞ்சமாய் தடுமாறி விட்டு உப்பிலியை தூக்கிக் கொண்டு உள்ளே சென்றனர். வைத்தியர் உப்பிலியை கொட்டாவி பிரிய பார்த்தார்.

"எங்க கடி?"

"கை மணிக்கட்டுல."

"கட்டைப் பிரிங்க..."

பிரித்தார்கள். கடிப்பட்ட இடத்தில் மணிக்கட்டும் எலும்பு தெரிந்தது. சாதாரணமாக அதைப் பார்த்த வைத்தியர் உள்ளே மங்கலான வெளிச்சம் உள்ள ஒரு அறை பக்கம் சென்றார். திரும்பி வந்தபோது அவர் கையில் ஒரு மண் சட்டி இருந்தது. அதன் உள்ள ஏதோ பச்சிலைக் கரைசல். ஒருவித பச்சைவாசம்.

"நாய்க்கடிக்கு மூலிகை வைத்தியமா?" கல்யாண சுந்தரம் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் கேட்டான்.

"இங்க இதுதான் வழக்கம். பதினாறு ஊசி போட்டு வயித்த புண்ணாக்கறது டவுன் பழக்கமா இருக்கலாம். ஆமா என்ன தப்பு பண்ணீங்க?"

"வைத்தியரும் அதே கேள்வியை கேட்டதில் மூவரும்கும் பொட்டில் சுட்டது.

"நான் கற்பழிச்சேன்... இவன் ஒரு பொண்ணு கையை பிடிச்சு இழுத்தான். அவன் களவாண்டான். நாய்கடிபட்டு படுத்துருக்கற இந்த உப்பிலி சாராயம் காய்ச்சினான். இதாங்க நாங்க பண்ணுன தப்பு."

கல்யாணசுந்தரத்தின் பதிலில் கோபமும் கிண்டலும் மண்டிக் கிடந்தது. வைத்தியர் பதிலுக்கு எதுவும் பேசாமல் அவர்களை ஒரு பார்வை மட்டும் பார்த்தார். டிராக்டரை ஓட்டிக் கொண்டு வந்தவன் இடையிட்டான்.

"வைத்தியரே... இவங்க ஊருக்கு புதுசு. நம்ம ஊர் சங்கதி எதுவும் இவர்களுக்குத் தெரியாது. நான் சங்கர் தம்பி சொல்லி இவர்கள கூட்டிகிட்டு வந்துருக்கேன். நீங்க பாருங்க..."

அவர் வைத்தியத்தை தொடர்ந்தார். அவன் பார்வை மூவர் மேலும் திரும்பியது. முறைத்தது. அதற்கு பதில் சுகுமாரிடம்.

"பின்ன என்னங்க என்ன தப்பு பண்ணீங்கன்னா என்ன கேள்வி இதுஃ"

"வெளியே வாங்க இங்க எதுவும் பேச வேண்டாம். அவர் வைத்தியம் பார்க்கட்டும்."

அவன் சொன்னபடி மூவரும் வெளியே சென்றனர். உப்பிலி உள்ளிருந்து கத்தினான். நன்றாகவே காதில் விழுந்தது."

"டேய்... என்னை நல்ல டாக்டர் கிட்ட கூட்டி கிட்டு போங்கடா. இங்க வேண்டாம்டா..."

"அவர் நல்ல வைத்தியர்தான். ஆயிருக்கணக்குல நாய் கடிக்கு வைத்தியம் பார்த்தவர். தைரியமா இருங்க."

என்றார் ட்ராக்டர் டிரைவர்.

"அப்படி இல்லீங்க... நாய்கடிங்கறது ரொம்ப ஜாக்கிரதையா பண்ண வேண்டிய விஷயம்."

"தெரியும்னு சொல்றேன்ல... ஆமா இப்ப நான் கேக்கறேன். கோபிக்காம பதில் சொல்லுங்க. என்ன தப்பு பண்ணீங்க?"

"இது என்னங்க கேள்வி... நாங்க எதுக்குங்க தப்பு பண்றோம். கல்யாணம் வீட்டுக்கு வந்துரக்கோம் அது ஒரு தப்பா?"

"இல்ல... பைவரசாமி கடிக்குதுன்னா

ஏதாவது தப்பு பண்ணியிருப்பீங்க...."

"தெருவுல கத்தற நாய் உங்களுக்கு பைரவ சாமியா... கொடுமைய்யா."

"எங்க கிராமத்தை பத்தி உங்களுக்கு தெரியாது. சங்கன், பைரவன், கழுகன், கடாயன், கருப்பராயன், காளிப்பன், கஜேந்திரன், கார்கோடன்னு எட்டு சாமிங்க எங்க ஊருக்கு... இவங்க எட்டு திக்குல நின்று காவல் காக்கறாங்க. இவங்க யாரையாவது தண்டிச்சா அவங்க ஏதோ தப்பு செய்துருக்கறதா அர்த்தம். தப்பு செய்யாம அவங்க தண்டிக்க மாட்டாங்க..."

"இப்படித்தான் கல்யாண வீட்ல ஒரு கிழவியும் சொன்னா. ஆனா உப்பிலி கேக்கல. எதுக்கு இப்படி மிரட்றீங்க...?"

"எந்த கிழவி வரதாயியா?"

"யாரோ ஒரு ஆயி. எனக்கு பதிலை சொல்லுங்க..."

"அப்ப வரதாயி சொல்லி கேக்கலியா... அதான் பைரவன் பாய்ஞ்சிருக்கான்..."

"சரி... கல்யாணம் இனி இந்த ஆள்கிட்ட பேசறதுல பிரயோஜனம் இல்லடா. தோட்டுத் தொட்டு நம்மள மிரட்டுறதையே குறியா வெச்சுக்கிட்டிருக்காங்க இவங்க பேச்சை விடு. உப்பிலியை கூட திருச்சில ஒரு டாக்டர் கிட்ட காட்டுவோம். ஏதாவது வண்டி வருதா பார். கமான்... நல்ல கிராமம்ப்பா..."

"டேய் சென்னைக்கு போன உடனே தமிழ் சினிமா கதாசிரியர்களை கூப்பிட்டு இந்த ஊரை பத்தி சொல்லணும். அவங்க இங்க வந்தாங்கன்னா மூட்டை மூட்டையா கதை கிடைக்ககும்டா..."

கிண்டல் ததும்ப கலாய்த்துக் கொண்டவர்களை டிரைவர் வெறித்தான். இனி நாங்க எதற்கு என்று யோசித்தானே என்னவோ நேராக உள்ளே சென்றான். வைத்தியர் கட்டு போட்டுக் கொண்டிருந்தார்.

"வைத்தியரே விட்ருங்க. இவங்களுக்கு சுயபுத்தியும் இல்லை சொல் புத்தியும்

இல்லை. வார்த்தைக்கு வார்த்தை படிச்ச திமிரை காட்றாங்க. பட்டணத்துக்கு விட்டுருங்க. நானும் வறேன். அங்க கல்யாண வீட்டுல ஏகத்துக்கும் வேலைங்க தலைக்கு மேல இருக்கு..." என்றபடியே துண்டை உதறிக் கொண்டு வெளியேறியவனை நான்கு பேரும் அதிர்ச்சியோடு பார்த்தார்கள்.

அவன் நிற்கவில்லை. மளமளவென்று நடந்து போய் டிராக்டரைக் கிளப்பிக் கொண்டு போயே போய் விட்டான்.

வைத்தியர் அவர்கள் நான்கு பேரையும் சோகத்தடன் ஒரு மாதிரி பார்த்தார். பதிலுக்கு அவர்களும் பார்த்தனர்.

"கட்டு போட்ருக்கேன்... உள்ளுக்கும் மருந்து தறேன். எந்த டாக்டரையும் போய் பார்க்க வேண்டாம். சரி ஆகிவிடும்."

வைத்தியர் குரலில் கடுமை தொனித்தது. அவர்கள் மௌனமாக நின்றனர்.

"நீங்க நாலு பேரும் இந்த கிராமத்துக்கு புதுசோ?" அவர்களது மௌனமே ஆமாம் என்றது.

"வாயைத் திறந்து பேசமாட்டீங்களா?"

"இல்ல... நாங்க எதுவும் பேசலை. பேசினா பதிலுக்கு எதையாவது சொல்லி எங்களை மிரட்டுவீங்க. ஆகையால நாங்க பேசலை" – என்றான் கல்யாணசுந்தரம்.

"மிரட்றதுக்கு நான் யார் தம்பி... சும்மா தெரிஞ்சுக்க கேட்டேன். நீதான் தப்பா எடுத்துக்கறே..."

"வேண்டாங்க... விட்ருங்க... நாங்கள் அழகன்பட்டிக்கு வந்து முழுசா இன்னும் ஒரு நாள் கூட ஆகலை. நடக்கற ஒவ்வொரு சம்பவங்களும் எங்களுக்கு புதிரா இருக்கு. கிராமங்கன்னா சில நம்பிக்கைகள் இருக்கும். கேள்விப்பட்ருக்கேன். ஆனா அழகன்பட்டியை பொருத்த மட்டுல நம்பிக்கைகளுக்குள்ள மட்டுமே கிராமம் இருக்கற மாதிரி தெரியுது. குளத்தங்கரைல ஒருத்தர் மிரட்றார். வீட்ல ஒரு பாட்டியம்மா மிரட்றாங்க. வர்ற வழியில

ஒருத்தர் மிரட்றார். போதுங்க... போதும்."

கல்யாணசுந்தரம் அடப்பமாக சலித்துக் கொண்டான். கச்சிதமாக "வைத்தியரே..." என்ற ஒரு குரல் அப்பொழுது ஒலித்தது.

வேளியில் பார்த்தனர்.

ஒருகாலும் ஒரு கையும் இல்லாத மனிதன் ஒருவன் கையில் கப்பரையோடு நின்று கொண்டிருந்தான்.

சக்களத்தி கரட்டில் பார்த்த அதே மனிதன்.

நண்பர்களுக்கு குப்பென்று வியர்த்து விட்டது.

சில நிமிடங்களுக்கு முன்பாக கையும் காலும் நன்றாக இருந்த நிலையில் டிராக்டரில் ஏறி நடு வழியில் இறங்கிக் கொண்ட அவனேதான்.

வைத்தியர் அவனைப் பார்த்துவிட்டு, "யாரு சித்திரனாரா... இதோ வந்துட்றேன்." –என்று உள்ளே போனார். திரும்பினவர் கையில் வாழை இலையில் மூடிய உணவு. மசால்வாசம் அது மாமிசம் என்றது.

நேராக போய் அவனிடம் நீட்டினார். அவனும் அப்படியே இலையோடு வாங்கிக் கொண்டான். திரும்பி நடந்தான். வைத்தியரும் திரும்பி வந்தார்.

"வைத்தியரே அது..."

"சித்திரனார்..."

"அந்த சக்களத்தி கரட்டுல இருக்கறவரா?"

"ஓ நீங்க அங்கல்லாம் கூட போனீங்களோஃ"

"போனோம். சிற்பங்கள்லாம் அழகா இருந்துச்சு. பார்க்கப் போனோம்." -இது கல்யாண சுந்தரம்.

"டேய் ஏண்டா பொய் சொல்றே... வரதாயி பாட்டி போய் அங்க இருக்கற சக்களத்தி சாமியை கும்புட்டுட்டு வரச் சொன்னிச்சு. அதுக்காவும் போனோம்." -இது ரமேஷ்.

"வரதாயி அப்படி காரணமில்லாம சொல்லியிருக்க மாட்டாளே..."

"ஆமாம். ஊர் குளத்துல குளிக்கும் போது ஒரு வராகன் பொன் கிடைச்சது. அது புதையல்

காசுன்னாங்க. அது யார்கிட்ட இருக்கோ அவங்க செத்து போயிடுவாங்கன்னு சொன்னாங்க. எல்லாமே காதுல பூ சமாச்சாரமா இருந்துச்சு. இருந்தாலும் சக்களத்தி கரட்டுல என்னதான் இருக்குன்னு பார்க்கப் போனோம். போன இடத்துலதான் இந்த நொண்டி மனுஷரையும் பார்த்தோம்."

"அதெல்லாம் சரி... அந்த ஒருவராாக பொன் எங்கே?"

"தெரியும்... இப்படி கேப்பீங்கன்னு தெரியும். அது இப்ப என் நண்பர் சங்கரநாராயணனோட சம்மந்தியம்மா கிட்ட இருக்கு."

"சரி... சக்களத்தி கரட்டுக்கு போன இடத்துல சக்களத்தியை கும்பிடலையா?"

"நாங்க பழனிக்கு போனா முருகனையே கும்புடமாட்டோம். இது என்ன வைத்தியரே சக்களத்தியை போய் சாமின்னுகிட்டு? அதுக்காக எங்களுக்கு கடவுள் பக்தி இல்லேன்னு நினைச்சுடாதீங்க. கடவுள் பக்தி வேற... இந்த மாதிரி முட்டாள்தனம் வேற..."

"அவ சாமிதான் தம்பிகளா... சாமிதான். அவ கதையை கேட்டா இப்படி எல்லாம் பேச மாட்டீங்க. எனக்கு இப்பதான் உங்களை ஏன் பைரவசாமி கடிச்சிச்சின்னு புரியுது."

"நீங்க வேற... எச்சிலை தின்னுகிட்டிருந்த நாய் அது. பைரவ சாமி அது இதுன்னுகிட்டு..."

"இப்ப வந்து பிச்சை வாங்கிட்டு போற சித்திரனார் கூட எங்க வரைல சாமிதான். பிச்சை எச்சில் எல்லாம் உங்களுக்குத்தான் கேவலம். உலகை வெறுத்துவிட்ட சன்யாசிக்ளுக்கு எல்லாம் ஒண்ணுதான்."

"சன்யாசிகளுக்கு ஒண்ணுங்கறது சரி... நாய்களை இந்த லிஸ்ட்ல சேர்த்தா எப்படிங்க?"

"சுகுமார் கொஞ்சம் பொறு. உப்பிலியைப் பார். அவன் சாதாரணமாக இருக்கான். உப்பிலி உனக்கு இப்ப எப்படி இருக்கு?"

"கட்டு போட்டதுல இருந்து வலி இல்லை கல்யாணம்."

"அப்ப நாம கல்யாண வீட்டுக்குப்

போகலாமா?"

"தம்பிகளா... அந்த தம்பி இங்கையே இருக்கட்டும். நீங்க போய்ட்டு வாங்க. நாளைக்கு காலைல, மதியம் மாலைன்னு மூணு நேரம் நான் மருந்து தரணும். அந்த மருந்தை சாப்பிடலைன்னா நாய் கடியால வர்ற வெறி நோய் வந்து இவரே நாய் மாதிரி குலைக்க ஆரம்பிச்சுடுவார். அதனால சொல்றேன் நீங்க போய்ட்டு வாங்க."

வைத்தியரை மூன்று பேரும் கவலையோடு பார்த்தனர்.

"சாரிடா... நீ கல்யாணத்துல கலந்துக்க வரலை. நாய் கடிபட்டு இப்படி வைத்தியர் வீட்டுல தங்கறதுக்குக்குத்தான் வந்துருக்கே... இங்கையே கிட நாங்க வறோம்" என்று அந்த இறுக்கத்திலும் ஜோக் அடித்தான் சுகுமார். வைத்தியர் சிரித்தார்.

"சரி சரி போய்ட்டு வாங்க... சங்கரநாராயணன் தம்பி எனக்கு நல்ல பழக்கம். நானும் நாளைக்கு காலைல முகூர்த்தத்துக்கு வரணும்" என்றார் வைத்தியர்.

மூவரும் தயங்கிக் தயங்கி புறப்பட்டனர். உப்பிலி பரிதாபமாகப் பார்த்தான். அவர்கள் சிறிது தூரம் போய் விட்டு நின்றார்கள். திரும்பிப் பார்த்தார்கள்.

"என்ன தம்பி... எப்படி அழகன்பட்டிக்கு போறதுன்னு பார்க்கறீங்களா?"

"ஆமாம்... அந்த ஊருக்கு போக பஸ் வசதி இல்லேங்கறது தெரியும். அந்த டிராக்டர் பார்ட்டியும் கோவிச்சுகிட்டு போய்ட்டார்."

"அட ஆமாம்ல... நான் ஒர கூறுகெட்ட குப்பன். தம்பிகளா வேற வழியில்லை. நீங்களும் இங்கதான் தங்கணும். முகூர்த்தத்துக்கு என் கூடவே வந்துடுங்க. காலைல பால் வண்டி ஒண்ணு போகும். அதுல தொத்திக்குவோம்."

அவர் பதில் உப்பிலிக்கு ஏகப்பட்ட சந்தோஷத்தை தந்தது.

"டேய் வாங்கடா... வாங்க... நீங்க மட்டும்

போய் தண்ணி அடிச்சிட்டு சீட்டு ஆடலாம்னு பார்த்தீங்களா. இப்ப எப்படி?" –என்று நாய் கடிபட்ட கையை ஆட்டிக் கொண்டு குஷியானான் உப்பிலி.

மூன்று பேரும் கொஞ்சம் போல அசடு வழிந்து விட்டு உள்ளே வந்தனர்.

நாட்டு ஓடு வேய்ந்த வைத்தியர் வீட்டின் முற்றம் சிலுசிலுவென்று சிமெண்டு பூச்சோடு கிடந்தது. அதில் ஒரு பனை ஓலைப் பாயை எடுத்து விரித்தார். வைத்தியர். நால்வரும் அதில் அமர்ந்தனர்.

"உங்களுக்குத்தான் சிரமம் தர்றோம்..." என்றான் கல்யாணசுந்தரம்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை தம்பி. வைத்தியத்துல தர்மோபகாரம்னு ஒரு முக்கியமான விஷயம். ஆமா பட்டணத்துல நீங்கள்லாம் என்ன பண்றீங்க?" பேச்சு ஆரம்பமாகியது.

"ஒரு தனியார் கம்பெனில எல்லோரும் வேலை பாக்கறோம்..."

"சங்கரு உங்க கூடதான் வேலை பாக்குதா?"

"ஆமாம்."

"எல்லாருக்கும் சொந்த வீடா... வாடகை வீடா?"

"எதுக்கு கேக்கறீங்க...?"

"இல்ல... மெட்ராஸ்னாலே இட நெருக்கடி, தண்ணி பிரச்சினைன்னு சொல்வாங்க. அதான் கேட்டேன்."

"வாடகை வீடுதாங்க..."

"அப்ப நடுத்தட்டு குடும்பம்னு சொல்லுங்க..."

"ஆமாம். மிடில்கிளாஸ்தான்..."

"அது சரி தம்பி... சங்கர் அவங்க கிராமம் பத்தி எதுவுமே சொன்னதில்லையா உங்ககிட்ட..."

"நிறைய சொல்லியிருக்கான். ஆனா இங்க வந்த பிறகுதான் அவன் சொன்னது குறைவு. சொல்லாதது அதிகம்கறது தெரிஞ்சிச்சு."

வைத்தியர் சிரித்தார். பிறகு உள்ளே போய் நான்கு பேருக்கும் சுக்கு வெல்லம் தட்டிப்

போட்டு மணக்க மணக்க காப்பி தயார் செய்து எடுத்து வந்தார்.

அந்த இடைவெளியில் நால்வரும் ஏதோ குசுகுசு என்று பேசிக் கொண்டிருந்தனர். அவர் வரவும் பேச்சை நிறுத்திக் கொண்டு அவரைப் பார்த்தனர்.

கெடிகாரம் வேறு நடுவில் 11 முறை சிணுங்கி நள்ளிரவுக்கு இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது என்றது.

"மணி 11 ஆயிடிச்சு... இந்த சுக்கு காபியை குடிச்சுட்டு படுங்க. காலைல நல்லா பசிக்கும். வெளியவும் போகும். உடம்பு கலகலன்னு ஆயிடும்..."

"உடம்பு கலகலன்னு ஆயிடும். ஆனா மனசு...?" கல்யாணம் கொக்கி மாட்டினான்.

"என்ன தம்பிகளா... ஊர் விஷயம் உங்களை குழப்பிடிச்சா?"

"ஆமாம்... நடந்ததை நாங்க தற்செயல்னு நினைக்கிறோம். ஆனா அதுல உண்மை இருந்தாலும் இருக்கலாம்னு உப்பிலி நினைக்கறான்..." அடுத்த நொடி வைத்தியர் பார்வை உப்பிலி மேல் சென்றது. உப்பிலி ஆமோதிப்பது போலப் பார்த்தான்.

"தம்பி... அழகன்பட்டி விஷயம் உங்களுக்கு மட்டுமில்ல எங்களுக்கும் கொஞ்சம் குழப்பற விஷயம்தான்." என்ற வைத்தியர், காலை மடித்துக் கொண்டு சௌகரியமாக அமர்ந்தார். அவர் ஒரு கதை சொல்ல தயாராகிவிட்டது அவர்களுக்குத் தெரிந்தது. அவர்களும் தயாராகி விட்டனர்.

## 9

**இந்த புதையல் ஆசை மட்டும் வரவே கூடாது. அது ஒரு மனிதனுக்கு வந்துவிட்டால் அவன் மனிதானகவே இருக்க முடியாது. சஞ்ஜீவி சாமி என்று ஒருவர் இந்த ஆசை காரணமாக ஒரு கர்ப்பிணியையே பலி கொடுத்தார் என்ற**

**ஒரு கதை இருக்கிறது.**

வைத்தியர் பரிமேலழகன்பட்டிக்கு ஒரு கதைச் சுருக்கம் சொல்லத் தயாராகிவிட்டார்.

"தம்பிகளா... இந்த அழகன்பட்டி சோழ ராஜ்யத்துல ஒரு சொல்லிக்கற மாதிரியான கிராமம். காவேரிப் பாசனத்தால் ஊர்ல வருஷத்துக்கு மூணு போகம். நெல்லு தவிர வாழை, கரும்புக்கும் பஞ்சமில்லை.

பொதுவுல ஆத்துப் பாசனமுள்ள இடங்கள்ல பண்க்கார நாட்டாமை அதிகம் இருக்கும். நிலமெல்லாம் அவங்க கைலதான் இருக்கும். நிலத்தை வெச்சுகிட்டு என்னதான் பண்ண... வேலை பார்க்க ஆள் இருந்தாதானே வெள்ளாமை? ஆகையால அந்த நாட்டாமைங்கிட்ட ஏகத்துக்கு பண்ணையாட்களும் இருந்தாங்க.

பகல் பூரா உழைப்பு. ராவானா தூக்கம். இதுதான் வாழ்க்கைப்பாடு. இந்த நிலைலதான். குருவராய பண்ணாடின்னு ஜோசியர் ஒருத்தர் ஊர் நாட்டாமை கூப்பிட்டதா சொல்லி வந்தார். பண்ணாடி ஒரு பிரமாதமான ஜோசியர். ஒருத்தர் முகத்தைப் பார்த்தே மூணு காலத்தையும் சொல்ற அளவு அவர் கெட்டிக்காரர்னு கேள்வி.

அப்படி வந்தவரை பற்றி ஊர்ல இருந்த பழைய ஜமீன்தாரன ராமதுரைங்கறவரும் கேள்விப்பட்டார். பண்ணாடியை தன் அரண்மனைக்கு, அதாவது பங்களாவுக்கு கூப்பிட்டார். பண்ணாடியும் போனார். அவர் ஜமீன்தாரை பார்த்த மாத்திரத்துல அதிர்ச்சியாயிட்டார்.

ஏன்னு கேக்கறீங்களா?"

வைத்தியர் இடைவெளி விட, நண்பர்கள் ஆமோதித்து தலையை அசைத்தனர்.

"அவர் பார்த்த மாத்திரத்துல அவர் மனைவி தலையை மட்டும் தனியா, முண்டம் தனியா, அதாவது அவர் மனைவியின் தலை தனியா, உடம்பு தனியா கிடக்கறதா ஒரு காட்சிதான் பண்ணாடிக்கு தோணிச்சாம். ஆனா இதை

எப்படி பண்ணாடி அவர்கிட்ட சொல்ல முடியும்? ஆகையால அதை மட்டும் சொல்லாம விட்டுட்டார். ஆனா வேற சில விஷயங்களை சொன்னார். அதுல ஒண்ணு, ஒரு பொண்ணால ஜமீன்தார் வாழ்க்கை திசை மாறிப் போகும்கறது...

பின்னால அப்டித்தான் ஆச்சு..."

மீண்டும் வைத்தியர் இடைவெளி. நண்பர்களை நோட்டமிடும் ஒரு பார்வை.

சுகுமார் உதட்டில் அவர் சொன்னதன் நிமித்தம் ஒரு நமட்டுச் சிரிப்பு.

"என்ன தம்பி... நான் சொல்றது உனக்கு சிரிப்பு இருக்குதா?"

"ஆமாங்க... அம்புலி மாமா கதையை கைல வெச்சுகிட்டு படிக்கற மாதிரி இருக்கு..."

சுகுமாரின் பட்டவர்த்தனம் வைத்தியரை ஊசியாய்க்குத்தியது.

"டேய் சும்மா இருடா... அவர் முழுசா சொல்லி முடிக்கட்டும்." –ரமேஷ் சுகுமார் தலையில் பேச்சோடு ஒரு தட்டு தட்டினான்.

"இதோ பார்... என் மனசுல பட்டதை நான் சொன்னேன். எதுக்குடா தலைல தட்றே-நாயே!" –பதில் தட்டு அவனிடம்.

"டேய் கொஞ்சம் சும்மா இருங்கடா..."

அவர்கள் அவர்களுக்குள் ஒரு சின்ன யுத்தம் நடத்திக் கொள்ள வைத்தியருக்கு கோபம் வந்தது.

"தம்பி... கொஞ்சம் நான் சொல்றத கேக்கறீங்களா? இது விளையாட்ற விஷயமில்ல. ரொம்ப சீரியஸான விஷயம் தம்பி..."

"சரி சரி சொல்லுங்க..."

"ஆமா கதையை எங்க விட்டேன்?"

"ஜமீன்தார் வாழ்க்கை ஒரு பொண்ணால திசைமாறும்னு சொன்னீங்க..."

"ரொம்ப சரி... அப்படித்தான் ஆச்சு. அழகன்பட்டிக்கு போற வழில ஒரு சின்ன குன்று. அதாவது கரடு ஒண்ணு வந்துச்சு இல்லியா?"

"சொல்லுங்க..."

"அந்த கரட்டுக்கு பெருஞ்சித்திரனார்ங்கற ஒரு சிற்பி குடும்பத்தோடு வந்தாரு. அவரோட மகள் பேர் மேகலை.... பொண்ணு அழகுன்னா அழகு அப்படி ஒரு அழகு..."

"நம்ம ஜோதிகா மாதிரியா?" –ரமேஷும் ஜாலியாக இடையிட்டான்.

"ஆமாம் நல்ல ஜோதிகா... என்னவோ நமக்கெல்லாம் அந்த பொண்ணு ரொம்ப குளோஸ் மாதிரி... இடியட் வாயை வெச்சுகிட்டு சும்மா இருடா... நீங்க சொல்லுங்க வைத்தியரே..."

"அந்த பொண்ணுக்கும் ஜமீன்தாருக்கும் ஒரு கனெக்ஷன் ஏற்பட்டுடுச்சு..."

"நினைச்சேன். ஊர்ல ஒரு பொண்ணு அழகா இருந்தாதான் அவங்களுக்கு பிடிக்காதே... அப்புறம்" இதுவும் ரமேஷ்தான்.

"ரமேஷ் சும்மா இரு... வைத்தியர் தூக்கத்தை கெடுத்துக்கிட்டு கதை சொல்றது பெழுது போகறதுக்காக இல்ல. நமக்கு தெரியணும்கறதுக்காக. நீங்க சொல்லுங்க வைத்தியரே."

"தம்பி ரொம்ப சாதாரணமாக நினைக்குது... பாத்து தம்பி சக்களத்தி விஷயத்தை ராமாயண கதை கேக்கற மாதிரி கேக்கணும். இல்லாட்டி கதை கந்தலாயிடும்."

"சரி சரி நீங்க கதை விடுங்க... சாரி சொல்லுங்க."

"ரமேஷ் நீ சும்மா இருக்க மாட்டே?" அதட்டினான் கல்யாணசுந்தரம். ரமேஷீம் வாய் மேல் ஆள்காட்டி விரலை வைத்துக் கொண்டு மலங்க மலங்க அரைச்சிரிப்போடு அமைதியானான்.

"சொல்லுங்க வைத்தியரே..."

"சொல்றேன்... ஜமீன்தார் இப்படி அந்த பொண்ணு மேல மோகமாகிப் போனது ஜமீன்தார் சம்சாரத்துக்கு பொறுக்கல."

"அது எப்படி பொறுக்கும். என் பொண்டாட்டியா இருந்தா செருப்பை கைல

எடுத்துக்குவா?"

"இவங்களும் எடுத்துகிட்டாங்களே..." – அதிர்ச்சியளித்தார் வைத்தியர்.

"வெரி இண்ட்ரஸ்ட்டிங்... அப்புறம்?"

"அப்புறமென்ன... அந்த பொண்ணு அவமானம் தாங்காம ஜமீன்தார்கிட்ட புலம்பினிச்சு. ஜமீன்தார் ராமதுரையும் பொண்டாட்டியை கூப்பிட்டு. விசாரித்தார். அதுவும் அப்படித்தான் செய்வேன். –கட்டின பொண்டாட்டி நான் உசுரோட இருக்கும்போது அவ யார் குறுக்க வர்றதுக்குன்னு கத்துனிச்சு."

"பின்ன... மாலையா போடுவாங்க?"

"கேளுங்க... இதுக்கப்புறம்தான் விஷயமே இருக்கு."

"என்னங்க..."

"அவர் சம்சாரம் இனி நீங்க அந்த சிற்பியோட பொண்ணை பாக்ககூடாதுன்னும் சொல்லிச்சு. உன்னை நான் தள்ளி வெச்சாலும் வைப்பேன். ஆனா அவளை, அதாவது மேகலையை நான் கைவிட மாட்டேன். அவ இனி என் மனைவி. உன் சக்களத்தி என்றார்."

"சரிதான்... சக்களத்தி கரடுங்கறதுக்கு இதுதான் காரணமோ?"

"டேய் குறுக்கப் பேசாதே... நீங்க சொல்லுங்க வைத்தியரே."

"ஜமீன்தார் சொல்லவும் ராணி கொதிச்சு போய்ட்டாங்க. பார்த்தாங்க. ஜமீன்ல இருந்த அவ்வளவு தங்க நகைகளையும், காசுங்களையும் அந்த அம்மா உடனே காபந்து பண்ண நினைச்சாங்க. ஏன்னா ஒவ்வொண்ணும் அந்த சிற்பியோட பொண்ணுக்கு பரிசா போய்கிட்டு இருந்துச்சு. ஆகையால எல்லா நகை, நட்டுக்களையும், தங்கக் காசுகளையும் ஒரு பானைல போட்டு எங்கையோ பொதைச்சு வெச்சுட்டாங்க... ஜமீன்தார் அப்புறமா ரொம்ப கஷ்டப்பட்டார். பொண்டாட்டியோட பேசறத நிறுத்தினார். அப்புறம் ஒரேயடியா அந்த மேகலைகிட்டையே போயிட்டார். இதை ஜமீன்தார் பொண்டாட்டி

எதிர்பார்க்கல. இந்த மாதிரி நேரத்துல தான் புத்தி எப்படி எப்படியோ போகுமே? ஜமீன்தார் பொண்டாட்டிக்கும் போனிச்சு."

"எப்படிங்க...?"

"சொல்றேன். அவங்க நேரா போய் குருவராய பண்ணாடியைப் பார்த்தாங்க. பண்ணாடி அந்த பொண்ணுக்கு சூன்யம் வெச்சா அவ அழிஞ்சு போயிடுவான்னு சொன்னார். சரி சூன்யம் வையுங்கன்னாங்க.

இது எப்படியோ மேகாலவோட அப்பா சிற்பி பெருஞ்சித்திரனார்க்கு தெரிய வந்தது. அவர் உடனே பதிலுக்கு சாமிநாத பண்ணாடிங்கறவரைப் போய் பார்த்தார்.

"அப்ப பண்ணாடிங்கறவங்க ஜோசியம் பாக்கறதோட இந்த மாதிரி சூன்யம் வைக்கற வேலையும் செய்வாங்களா?"

"எல்லா பண்ணாடிகளும் பண்ண மாட்டாங்க. சிலர் நியாயம் எந்தப் பக்கம் இருக்குன்னு பார்த்து பண்ணுவாங்க."

"அப்போ இரண்டு பண்ணாடிகள் மோதிகிட்டாங்களாக்கும்?"

"ஆமா... அதுல சிற்பியோட சாமிநாத பண்ணாடி ஒரு வேலை செஞ்சாரு. பெருஞ்சித்திரனாரை கூப்பிட்டு எட்டு காவல் தெய்வங்களை சிற்பமா செதுக்கச் சொன்னாரு."

"எதுக்கு...?"

"ஏவல் செய்வினைகளை அந்த காவல் தெய்வங்க தடுத்திருவாங்க. அதோட ஊர்ல இருந்து எதையும் யாரும் எடுத்துகிட்டும் போகாம தடுப்பாங்களாம்."

"கல் சிலைங்க அப்படி எல்லாம் கூடவா செய்யும்?"

"அதுக்கு தன் மந்திரத்தால சாமிநாத பண்ணாடி சக்தி கொடுக்கப் போறது குருவராய பண்ணாடிக்கு தெரிய வந்து அவர் ஒரு வேலை செஞ்சாரு. ஜமீன் ஆளுங்களை கூட்டிகிட்டு போய் ராத்திரியோட ராத்திரியா அந்த சிலைங்களை தூக்கிகிட்டு வரச் சொல்லி

அதுக்கு அவர் சக்தியை கொடுத்துட்டார்."

"சபாஷ்... எதிரியோட சிலைகளையே எதிரிக்கு எதிரியா மாத்திட்டார். குருவராய பண்ணாடி. வெரிகுட் இப்படில்ல இருக்கணும்."

"டேய் சும்மா இருடா... நீங்க சொல்லுங்க வைத்தியரே!"

"இப்படி ஒரு பக்கம் இரண்டு பேரும் மோதிக்கறது சிற்பியோட மகளான மேகலைக்குப் பிடிக்கலை. அவங்க யாரும் எதிர்பார்க்காத ஒரு முடிவுக்கு வந்தாங்க. துணிச்சலா போய் ஜமீன்தார் சம்சாரத்தை அதாவது ராணியையே சந்திச்சாங்க..."

"அப்புறம்?"

"நாம இப்படி மோதிக்க வேண்டாம். என்னை உங்க சக்களத்தியா ஏத்துக்குங்க. ஒத்துமையா போயிடலாம்னு சொன்னாங்க."

"அடடே..."

"அதுதான் நடக்காது... நீ என்னைப் பார்த்து பயந்துட்டே. ஜெயிக்க முடியாதுன்னு தெரிஞ்சு இப்ப வந்து கால்ல விழறே... நீ ஒண்ட வந்த பிடாரி... உன்னை உயிரோட விட மாட்டேன்னு அங்கேயே கத்தியால மேகலாம்மாவை ராணி குத்திட்டாங்க. இதை கேள்விப்பட்ட ஜமீன்தார் ஆவேசமா வந்து ராணியை குத்திட்டார்."

"போச்சுடா... இரண்டு பொம்பளைங்களும் அவுட்டா?"

"ஆமாம். ஜமீன்தார் அதோட விடலை. நேரா போய் குருவராய பண்ணாடியையும் குத்தி கொன்னுட்டார்."

"அடக்கொடுமையே..."

"ஊரே இதைப் பார்த்து மலைச்சுப் போச்சு. ஜமீன்தார் ஆசை நாயகியான மேகலாம்மா உடம்பை தோள்ள போட்டுகிட்டு நேரா அவங்க தங்கி இருந்த காட்டுக்கு போனார். அங்கையே அவங்கள புதைச்சார். அப்பால சோறு தண்ணிக்கு எதுவும் எடுத்துக்கலை..."

"அப்புறமா அவரும் காலியா?"

"ஆமாம்... மேகலாம்மா செத்துப் போன பத்தாவது நாள் அவங்களுக்கு கர்ம காரியம்

பண்ணிட்டு அவரும் உசுரை விட்டுட்டார்..."

"அப்ப அந்த நகைங்கள்லாம்...?'

"அதை புதைச்சது ஜமீன்தார் சம்சாரமாச்சே? அவங்களுக்குத் தானே தெரியும்..."

"அவங்களும்தானே செத்து போயிட்டாங்க."

"அதனாலதான் அது எங்க போச்சுன்னு யாருக்குமே தெரியல. இருந்தும் பல பேர் அதை தேடினாங்க. வயல் வேலையே நடக்கலை. ஒரு காலத்துல எங்க பார் குழிகள்தான்... இருந்தும் கடைசி வரை அது கிடைக்கலை. அதே சமயம் ஊர்ல இருந்து யாரும் எதையும் எடுத்துக்கிட்டும் வெளியே போக முடியலை..."

"அது ஏன்?"

"பண்ணாடி உசுர் கொடுத்த அந்த சிலைங்க காவலா இருந்து இன்னிக்கு வரை அந்த புதையலையும் ஊர்ல இருக்கற தங்கத்தையும் பாதுகாத்துகிட்டு இருக்கறதா நாங்க எல்லாம் நம்பறோம்..."

"எதை வெச்சு...?"

"நாய் கடிபட்ட உங்களை மாதிரி நபர்களை வெச்சுதான்" –அழகாக மடக்கி பதிலளித்தார் வைத்தியர்.

"சரி... ஊருக்கு எட்டு காவல் தெய்வங்கள் இருந்து காவல் காக்குது. அதே சமயம் சக்களத்தி கரட்டுலயும் ஒரு சக்தி இருக்கற மாதிரி தெரியுதே... அது எப்படி?"

"ஆமாம்... இந்த காவல் தெய்வங்கிட்ட இருந்து காப்பாத்தற சக்தி சிற்பியோட பொண்ணான அந்த மேகலாங்கற சக்களத்திகிட்டதான் இருக்கு. ஆகையால புதையல் தேடறவங்க பிரச்சினை வந்தா சக்களத்தி கரட்டுக்கு போவாங்க. சரியாயிடும்."

"இல்லையே... எல்லாரும் பயப்படற மாதிரில்ல தெரியுது."

"ஆமாம்... செத்துப் போன சக்களத்தி மேகலை அந்த கரட்டுல இருக்கா. தன்னை வணங்காம யாராவது போனா அவங்களுக்கு தொல்லை தர்றதால அந்த பயம்."

"அந்த கரட்டுல ஒருத்தர் ஒரு காலும் கையும் இல்லாம இருந்தாரே அவர் யார்?"

கல்யாணசுந்தரம் இறுதியாக அந்த கேள்விக்கு வந்தான்.

"அவன் வேற யாருமில்ல... செத்துப் போயிட்ட சக்களத்தியோட தம்பி. பேர் குறுஞ்சித்திரன்!"

"தம்பியா...?"

"ஆமாம் வயசு நூத்தி இருபது..."

"ஆத்தாடி... வைத்தியரே இதுவரை காதுல பூ சுத்தின நீங்க இப்ப பூச்சரத்தையே சுத்தப் பாக்கறீங்களே... நியாயமா?"

சுகுமாரின் கிண்டல் வைத்தியர் முகத்தில் கொந்தளிப்பை உருவாக்கியது.

"என்னோட குழந்தைப் பிராயத்துல இருந்து நான் சித்திரனைப் பார்த்துகிட்டு வறேன். உங்ககிட்ட பொய் சொல்லணும்கற அவசியம் எனக்கு இல்லை புரிஞ்சுக்குங்க...." –கத்தினார்.

"சரி அப்படியே இருக்கட்டும். அது ஏன் ஒரு கால் ஒரு கை இல்லாம- அதுவும் மாறுகை வாங்கின நிலைல?"

"எல்லாம் ஜமீன்தார் பொண்டாட்டி செய்த கொடுமை. அவனை அப்படி தண்டிச்சா அந்த சிற்பி ஊரை விட்டு ஓடிடுவான்னு நினைச்சாளாம். ஆனா நடக்கலை."

"சரி எப்படி இத்தனை வருஷம் உயிர் வாழ முடியுது. அவரால...?"

"சக்களத்தியை நம்பிட்டா சாவு இல்லை. நம்பலேன்னா சாவுங்கறதுக்கு அவன் ஒரு உதாரணம். இது தான் எனக்குத் தெரியும்."

"ஸோ... நீங்க சொன்னதையெல்லாம் கூட்டிக் கழிச்சா பல விஷயங்கள் தெளிவாகுது. ஊர்ல தங்கப் புதையல் இருக்கு. அதை எட்டு திசைக்கும் எட்டு காவல் தெய்வங்க காவல் காக்கறாங்க. அதை தேடின யாருக்கும் இதுவரை அது கிடைக்கல. மீறி கிடைச்சாலும் அதை எடுத்துக்கிட்டு ஊரை விட்டுப் போக முடியாது. காவல் தெய்வங்க விட மாட்டாங்க. அப்படித்தானே?"

"ஆமாம்!"

"இதுல எந்த சிக்கல் வந்தாலும் காப்பாத்த சக்களத்தி இருக்கா. சக்களத்தியை நம்பினா நல்லதே நடக்கும். இல்லாட்டிக் கெடுதல்தான். இதுவும் சரிதானே...?"

"ரொம்ப சரி."

"அப்ப சக்களத்தியை நம்பி அவ ஆசீர்வாதத்தோட புதையல் தேடினா?"

"தேடலாம்... ஆனா புதையல் இருக்கற இடம் தெரியணுமே?"

"குளத்துல எங்களுக்கு ஒரு வராகன் கிடைச்சிச்சு. ஏன், மத்த புதையல் தங்கமும் குளத்துல இருக்கக் கூடாது?"

"இருக்கலாம்... அது சரி இந்த விஷயம் உங்களைத் தவிர வேற யாருக்குத் தெரியும்?"

"வரதாயிப் பாட்டிக்குத் தெரியும்."

"வரதாயிக்கு தெரியுமா... அப்ப அவ்வளவுதான்! பாட்டி உங்களை இந்த பக்கம் பேக் பண்ணிட்டு அந்த பக்கம் புதையல தேட ஆரம்பிச்சிருப்பா..."

"அப்படியா... பாட்டியும் புதையலைத் தேட்ற ஒரு நபரா?"

"பாட்டி ஜமீனுக்கு சொந்தக்காரி வேற, விடுவாளா?"

"உப்பிலி... பாருடா உன்னால ஒரு புதையல் ரகசியமே வெளிய வந்திருக்கு..."

"அது சரி... பாட்டியை அந்த காவல் தெய்வங்க ஒண்ணும் செய்யாதாஃ"

"நிச்சயமா சும்மா விடாதுன்னுதான் சொல்வேன். ஒரு உண்மையை சொன்னா நீங்களே அசந்துடுவீங்க..."

"என்ன?"

"அந்த ஒரு பவுன் வராகன் உங்க கிட்டையே இருந்திருந்தா நீங்களும் ஊர் எல்லையை தாண்டி வந்திருக்க முடியாது. அது இல்லாததாலதான் வந்திருக்கீங்க. அதே சமயம் அதை எடுத்த கையை பைரவன் எப்படி கடிச்சிருக்கான் பாத்தீங்களா?"

வைத்தியர் உப்பிலியின் கட்டுப் போட்ட

கையைப் பார்த்தார்.

"என்ன வைத்தியரே புளியைக் கரைக்கறீங்க? அது சரி... நீங்க புதையலை தேடலியா?"

"இவ்வளவு விவரம் தெரிஞ்ச நான் தேடுவேனா? அப்புறம் என் உயிர் என்னாகறது?"

"போகட்டும்... உங்க வீட்ல டி.வி. இருக்கா?"

"இருக்கு... எதுக்கு கேக்கறீங்க?"

"அதுல ஸ்டார் டி.வி. டிஸ்கவரி சேனல்னு ஒண்ணு வருது... பார்ப்பீங்களா?"

"உம்."

"பட்டுப் புழு பூச்சியாகறதுல இருந்து, செவ்வாய் கிரகத்துல தண்ணீர் இருக்குங்கற வரை விலாவரியா காட்றாங்களே பார்த்திருக்கீங்களா...?"

"உம்..."

"அது விஞ்ஞானம். ஒவ்வொண்ணுக்கும் அதுல ஆதாரம் இருக்கு. காரண காரியம் இருக்கு. அதையெல்லாம் பார்த்துட்டு எப்படி வைத்தியரே இந்த மாதிரி விஷயங்களையும் நம்பறீங்க..."

சுகுமார் கிடுக்கிப் பிடி போட்டு விட்டது போல் ஒரு கர்வப் பார்வை பார்த்தான். ரமேஷ் கட்டை விரலை உயர்த்தியபடி, "நான் நினைச்சேன்- நீ கேட்டுட்டே" என்றான்.

வைத்தியர் சிரித்தார்...

"அடிக்கடி இப்படி சிரிக்கறீங்க... நீங்க சொன்ன கதையை டி.வி. சீரியலா எடுத்தா அதுல உங்க கேரக்டர்ல நடிக்க உங்களையே போடலாம். அப்ப உங்க சிரிப்பை சரியான மர்மச் சிரிப்புன்னும் பத்திரிகைல எழுதுவாங்க..."

ரமேஷ் விடவில்லை. திரும்ப சிரித்தார் வைத்தியர்.

"குமுதம் ரிப்போர்ட்டர் படிக்கறீங்களா?" என்று கேட்டார்.

"படிக்கறோமே..."

"அதுல மதன் கட்டுரையை படிக்கறீங்களா?"

"படிக்...கி...றோம்" -மூவர் குரலிலும் ஒருவித இழுவை.

"என்ன இழுக்கறீங்க... அதுல டெலிபதி பற்றி, வானத்துல இருந்து பல டன் மீன்கள் தரைல விழுந்தது பற்றியெல்லாம் எழுதி, அதை எல்லாம் புரிஞ்சுக்கவே முடியலைன்னு சொல்லியிருக்காரே... அதுவும் போட்டோவோட... பார்த்தீங்களா?"

"அது... ஏரோப்ளேன்ல மீன் ஏத்திகிட்டு போயிருப்பாங்க. சிலிப் ஆகி கீழ கொட்டியிருக்கும்..."

"அப்படியெல்லாம் இல்லைன்னு புரூப் ஆகியிருக்கு."

"ஏதாவது சுழல்காற்று உறிஞ்சிகிட்டு போய் அப்புறமா கீழ கொட்டியிருக்கும்."

"அப்படியும் இல்ல... அது சரி இங்கையே நம்ம மண்ணுல எவ்வளவோ பேர் சித்து வேலைகள் செய்யறாங்களே. அதுக்கு என்ன சொல்றீங்க?"

"சித்து வேலைங்கறதே புருடாதானே... ஏமாற்றுதானே?"

"அப்படின்னு யார் சொன்னா...?"

"நாங்க சொல்றோம்!"

"அப்ப அந்த புருடாவை. ஏமாற்று வித்தையை நீங்க செய்யலாமே...?"

"எதுக்கு... உதை வாங்கவா?"

"இப்படி எகணைக்கு மொகணை பேசறத விட்டுட்டு எதையும் புரிஞ்சுக்க முயற்சி செய்யுங்க. புரிஞ்சுக்க முடியாட்டி பொய்னு சொல்றது சுலபம். அது பழம் கிடைக்காத நரி அது புளிக்கும்னு சொன்ன மாதிரி. ஒரு சுலபமான விஷயம். கஷ்டமான விஷயமான இதுல இருக்கற உண்மையை புரிஞ்சுக்க பாருங்க."

"முடிவா என்ன சொல்றீங்க...?"

"இந்த புதையலுக்காக அழகன்பட்டில பல பலிகள் கொடுக்கப்பட்டிருக்கு... ஊரே ஆசையால அலை மோதியிருக்கு. பல கர்ப்பிணி பெண்களை பல மந்திரவாதிகள்

பலி கொடுத்து பூஜை செய்து அது எங்கே எங்கேன்னு தேடியிருக்காங்க. யாருக்கும் தெரியல. யாராலையுமே கண்டுபிடிக்க முடியலை.

ஆனா அந்த ரகசியம் உங்கள்ல ஒருத்தனான இந்த உப்பிலி மூலம் தெரிய வந்துருக்குன்னா அது ஆச்சரியம். அதிசயம்."

"நிஜமான புதையல் இருந்தா ஆச்சரியம்தான் அதிசமயம்தான்... குறிப்பாக நீங்க சொன்ன கதை கற்பனையா இல்லாம உண்மையா இருந்தா நிச்சயமா- ஆச்சரியம்தான். அதிசயம்தான்..."

"அப்ப பொய்யா இருக்கும்னு ஒரு சந்தேகம் இன்னும் இருக்கா?"

"நிச்சயமா... கதை கேட்டு வாயப் பொளக்க நாங்க பள்ளிக்கூட பசங்க இல்லை. எதையும் அனுபவ பூர்வமா உணர்ந்தாதான் நம்புவோம்."

கல்யாணசுந்தரம் அழுத்தம் திருத்தமாகச் சொன்னான்.

"அப்ப சரி... என்னவானாலும் சரி இப்பவே புறப்படுவோம். நிச்சயமா வரதாயி. குளத்துல இறங்கியிருப்பா... புதையலை தேடிகிட்டிருப்பா. அதைப் பார்த்த பிறகாவது நான் சொன்னது கதையா இல்லை உண்மையான்னு தெரிஞ்சுக்குங்க... புறப்படுங்க."

வைத்தியரிடம் வேகம் தொற்றிக் கொண்டிருந்தது. உப்பிலி, "அவசரப்படாதீங்க..." என்றான்.

"ஏண்டா அவசரப்படாதேங்கற... போய்தான் பார்த்துடுவோமே..."

"பார்ப்போம் நான் மறுக்கல. ஆனா குளத்துல புதையல் இருந்தாலும் அதை அந்த கிழவியால எடுக்க முடியாது."

"எப்படிடா சொல்றே?"

"ஆமாம்... அதோட ஆழம்- உள்ள இருக்கற அழுத்தம் இதெல்லாம் எனக்குதான் தெரியும். எனக்கு யோகப் பயிற்சி கொஞ்சம் தெரியும். அதனால நல்ல மூச்சு கட்டுவேன் நான். ஆனா

அது அந்த பாட்டியோட ஆட்களால முடியணுமே. அடுத்து... ஒரு பானைல வெச்சு ஒளிச்ச புதையல்னு இவர் சொல்றார்... அப்படின்னா என் கைல பானைதானே அகப்பட்டு இருக்கணும். ஒரே ஒரு வராகன்தானே கிடைச்சது?"

உப்பிலியின் கேள்வி அனைவரையும் கட்டிப் போட்டது. வைத்தியரும் கொஞ்சம் மயங்கித்தான் போனார். ஆனாலும் நிமிர்ந்தார்.

"நியாயமான சந்தேகம்தான். என் சந்தேகம் என்னன்னா அந்த புதையல் பானையை ராணியம்மா குளத்துக்குள்ள போடும் போது ஒரு சில வராகன்கன் தவறி குளத்துல விழுந்திருக்கலாம். அது இந்த உப்பிலி கைல கிடைச்சிருக்கலாம் இல்லியாஃ"

"இருக்கலாம்... இந்த ராத்திரியில இங்க முடங்கிக்கிடக்கறதுக்கு குளத்தங்கரைக்கு போய்தான் பார்த்துடுவோமே..."

ரமேஷ் துடித்தான்.

"பால் வண்டி காலைல இல்ல வரும்னாரு...?"

"பால்வண்டி காலைலதான் வரும். ஆனா சைக்கிள் வண்டி இருக்கே. அதுல போக முடியாது?"

வைத்தியர் கேட்ட ஐந்தாவது நிமிடம் இரண்டு சைக்கிள்களில் ஐந்து பேரும் புறப்பட்டு விட்டனர்.

## 10

**"இந்த புதையல் கதையின் இன்னொரு பக்கம் விசித்திரமானது. அவ்வளவும் அப்பட்டமான பொய் என்கிறார் ஊர் வாத்தியார் சிவஞானம் பிள்ளை.**

**அந்த நாளில் அழகன்பட்டியில் களவு மிக அதிகமாக இருந்தது. கள்ளர்கள் கன்னம் வைத்து திருடினார்கள். அப்படி திருட வருபவர்கள் பலி பூஜைகள் செய்து**

**விட்டுத்தான் வந்தார்கள். ஜமீனில் எதுவும் இல்லை. எல்லாம் புதையலாகி விட்டது என்று அவர்களை ஏமாற்றுவதற்காகவும். அச்சுறுத்தி வைக்கவும் எட்டுப் பக்கமும் காவல் காக்கின்றன என்றும் கதை கட்டிவிட்டார்கள். எனவே திருடுவதற்கு ஜமீனில் எதுவும் இல்லை. எல்லாம் எங்கோ புதைந்து போய் விட்டது என்று கள்ளர்கள் நினைக்க வேண்டும் என்பதற்காக சொல்லப்பட்ட பொய் கதைதான் அது. அதை உண்மை என்று நம்பி ஊரே ஏமாந்து கொண்டிருக்கிறது என்றார் வாத்தியார்.**

பரிமேலழகன்பட்டிக்கு செல்லும் கப்பிச் சாலையில் சைக்கிள்கள் இரண்டும் பறந்து கொண்டிருந்தன. நானிருக்கிறேன் என்கிற மாதிரி நிலா வழிகாட்டிக் கொண்டிருந்தது.

சக்களத்தி கரட்டை கடக்கும் போது மட்டும் கொஞ்சம் அச்சமாக இருந்தத. வைத்தியர் வண்டியை நிறுத்தச் சொல்லி கீழே இறங்கினார்.

தயாராகக் கொண்டு வந்திருந்த கற்பூரத்தை சாலையோர கருங்கல் மேல் வைத்துக் கொளுத்தினார்.

திகுதிகுவென்று கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

நண்பர்களை பார்த்தார்.

"நம்பிக்கை இருக்கோ இல்லியோ கும்புட்டுக்குங்க..." என்றார்.

அவர்களும் அரை மனதாக கன்னத்தில் போட்டுக் கொண்டனர். திரும்பவும்

சைக்கிள்களிடம் சீற்றம். ஊருக்குள் நுழையாமல் சைக்கிள்கள் இரண்டும் பக்க வாட்டுப் பாதையில் புகுந்து குளத்தங்கரைக்கு சற்று முன் வரை போய் நின்றது.

"வண்டியை இங்கேயே நிறுத்திட்டு, சத்தம் போடாம வாங்க..." –என்ற வைத்தியர் ஓசையின்றி பூனை போல நடந்தார். பார்த்தீனியம் இடுப்புயரத்திற்கு

வளர்ந்திருந்தது. மின்மினிகள் அதில் குடியேறி சிக்னல் லைட்போல் அணைந்து அணைந்து பிரகாசித்துக் கொண்டிருந்தன.

சில்வண்டும், ராக்கோழிகளும், மெல்லிசைக் கச்சேரி நடத்திக் காதைச் சிராய்க்க, எங்கும் இரவின் ராஜ்ஜியம், அதில் தவழும் நிலா வெளிச்சம்.

"வாங்க... வாங்க... பாத்து வாங்க" எச்சரிக்கையோடு நடந்து குளத்தங்கரைக்குப் போனார் வைத்தியர்.

அமைதியாகத் தெரிந்தது குளம்.

வட்ட வடிவத்தில் ஒரு வெள்ளைத் துணி மிதக்கின்ற மாதிரி குளத்து நீரின் மையத்தில் சந்திரன் மிதந்து கொண்டிருந்தான். ரசிக்கத்தான் மனநிலை இடம் தரவில்லை. குளத்தங்கரையிலும் யாரையும் காணவில்லை.

வைத்தியருக்கு ஏமாற்றமாகி விட்டது.

பூனை போல நடந்து வந்து நாய் சிலை இருக்கும் படித்துறைப் பக்கம் வந்து எட்டிப் பார்த்தார்.

அந்த சிலைக்குப் பக்கத்தில் படுத்துக் கிடந்தது பகலில் உப்பிலியைப் பிடுங்கிய கறுப்பு நாய்.

அதைப் பார்த்த சஷணம் உடம்பு நடுங்கியது.

'நானில்ல... நானில்ல... என்கிற மனக்குரலோடு திரும்பினார்.

உப்பிலியும் வெலவெலத்துப் போனான். ரமேஷீம் சுகுமாரும் ஒட்டிக் கொண்டு பின்னால் ஓடினார்கள்.

கல்யாண சுந்தரத்துக்கு குப்பென்று வியர்த்து விட்டது.

அங்கிருந்து ஓட்டமாய் விலகி ஒரு புதரில் முடங்கினார்கள்.

"என்ன வைத்தியரே... என்னென்னவோ சொன்னீங்க யாரையும் காணமே?"

"அது... அந்த பைரவன் படுத்துருக்கான்... அவனுக்கு பயந்துகிட்டுதான் அந்த வரதாயி

கிழவி ஓடியிருப்பா" என்றார்.

"அட என்ன வைத்தியரே நீங்க... புதையல் ரகசியம் தெரிஞ்சுட்ட நிலைல நாய் படுத்துருக்குன்னு யாராவது சும்மா இருப்பாங்களா? ஒரு துப்பாக்கி தோட்டா போதுமே அதை காலி பண்ண...?"

ரமேஷ் தான் சுத்தமாக இதை எல்லாம் நம்பத் தயாரில்லை என்பது போலவே எதிர் கேள்வி கேட்டான். வைத்தியர் தடுமாறினார். என்ன பதில் சொல்வது என்பது தெரியாமல் திணறிவிட்டு "அது... அது... தம்பி அது நீ நினைக்கற மாதிரி சாதாரண நாய் இல்ல. அதோட சுட்டுக் கொல்லணும்னா துப்பாக்கி வேணும். கிழவிகிட்ட ஆத இருந்துருக்காது..." என்று தனக்குத் தெரிந்ததைச் சொல்லிச் சமாளித்தார்.

சுகுமார் கைக்கெடிகாரத்தைப் பார்த்தான்.

மணி அதிகாலை ஐந்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

"விடியப் போகுது... நாம் புதையல் தேடி வீணா அலைஞ்சிகிட்டிருக்கோம்னு நினைக்கறேன். கல்யாணம், ரமேஷ்... கல்யாண வீட்டுக்குப் போயிருந்தா சந்தோஷமா தண்ணியடிச்சுட்டு சீட்டாடியிருக்கலாம்டா. இவரோட வந்து ஏமாந்ததுதான் மிச்சம்" என்றான்.

வைத்தியர் முகத்தில் வழிசல். நடுவில் ஒருவித குமுறல்.

"இல்ல தம்பி... நான் சொல்றது சத்தியம். புதையல் ரகசியம் சாதாரணமான விஷயம் இல்ல. ஆனா நீங்க அதை போற போக்குல கண்டுபிடிச்சு அருமை தெரியாம கிழவி கிட்டயும் சொல்லிட்டீங்க" என்று திரும்பத் திரும்பச் சொன்னார்.

"சரி நடங்க..." என்று கல்யாணம் காலெடுக்கவும் கல்யாண வீட்டில் பாட்டு ஒலிக்கவும் சரியாக இருந்தது.

'விநாயகனே... வினை தீர்ப்பவனே....

வேழ முகத்தோனே... ஞான முதல்வனே'

சீர்காழியின் குரலில் பரிமேலழகன் பட்டி மேல் அந்த பக்திப் பாடல் அதிகாலை அமைதியில் ஒரு பக்தி பூர்வ உலாவில் நுழைந்திருந்தது.

வைத்தியர் முகத்தில் மட்டும் மாறாத சலனம்.

# 11

**"இந்த புதையல் வேட்டையில் புதையல் கிடைத்ததோ இல்லையோ... பல புதைந்து போன ரகசியங்கள் வெளியில் வந்தன. ஊருக்கு வடக்கில் ஒரு காட்டாமணக்கு காடு இருக்கிறது. அதில் ஒரே ஒரு குழியில் ஒன்பது எலும்புக் கூடுகள் வெளிப்பட்டன. அழகன் பட்டியிலும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் காணாமல் போயிருந்தார்கள. அவர்கள் காணாமல் போகவில்லை. கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. ஆனால் கடைசி வரை அந்த புதையல் பானை ரகசியம் மட்டும் தெரியவே இல்லை."**

கல்யாணம் வீடே விழித்துக் கொண்டிருந்தது.

கண்களை கசக்கிக் கொண்டு உள்ளே நுழைந்த நண்பர்களைப் பார்த்துவிட்டு ஓடி வந்தான் சங்கரநாராயணன். உப்பிலியின் கையையும் கட்டையும் பார்த்தான்.

"டேய் எப்படிடா இருக்கு இப்ப...?"

"வலியெல்லாம் ஒண்ணுமில்லடா... உங்க பக்கத்து ஊர் வைத்தியர் பெரிய ஆள்தான்" – என்று பதில் வர, வைத்தியரும் கண்ணில் பட்டு சங்கரநாராயணன் அவரது கைகளைப் பற்றி, "வாங்க வாங்க" என்றான்.

"ஆமா... என்ன இந்த நேரத்துல வந்துருக்கீங்க?"

"எல்லாத்தையும் பிறகு சொல்றோம். முதல்ல

கல்யாண வேலையைப் பாரு" –என்று அவனை கத்தரித்துவிட்டனர். சங்கரநாராயணனின் அம்மா சந்திராவதியும் கல்யாணப் பெண் அபிராமியும் கூட நண்பர்களைவ ந்து பார்த்து நலம் விசாரித்து விட்டுப் போனார்கள்.

சிலர், நெருங்கி வந்து கைக்கட்டைப் பார்த்து விட்டு 'சக்களத்தி காப்பாத்திட்டா' என்றனர். கூட்டத்தில் வரதாயிப் பாட்டியைத்தான் காணவில்லை. வைத்தியரும் அவளைத் தேடினார். பிறகு உப்பிலியைக் கூப்பிட்டுக் கொண்டு தன் வீட்டுக்குப் போய் காலையில் கொடுக்க வேண்டிய மருந்தைக் கொடுத்துவிட்டு திரும்ப அழைத்து வந்தார்.

முகூர்த்த நேரம் நெருங்கியிருந்தது.

கச்சிதமாக வரதாயிப் பாட்டி உள்ளே வந்தாள்.

அட்சதையை அள்ளிப் போட்டுவிட்டு, ஒரு ஐம்பத்தி ஒன்றை மொய் செய்துவிட்டு, சாப்பிடாமல் கொள்ளாமல் நழுவப் பார்த்தவளை ஓடிச் சென்று தடுத்தான் கல்யாணசுந்தரம்.

"பாட்டி..."

"என்னடா தம்பி... எப்படி இருக்கான் உன் தோஸ்த்து?"

"நல்லா இருக்கான். ஆமா எங்க பாட்டி வந்தீங்க? போறீங்க..."

"ஏன்... என்ன பண்ணணும்கறே...?"

"ஒண்ணுமில்ல பாட்டி... உன்கிட்ட கொஞ்சம் பேசணும்..."

"எதைப் பத்தி?"

"எல்லாம் அந்த புதையலைப் பத்திதான்..."

"புதையலா?" –பாட்டி வெற்றிலைக் காவி வாயை முதலை மாதிரி திறந்தாள்.

"நீதானே நேத்து சொன்னே...?"

"எப்ப சொன்னேன்...?"

"நேத்து சாயந்திரமா சொல்லலை..."

"வயசாயிடிச்சு இல்லயா... எப்ப எதைப் பேசறேன்னு தெரியல. ஒரே ஞாபக மறதி."

"என்ன பாட்டி... எங்களை எல்லாம்

ஏகத்துக்கும் மிரட்டி... சக்களத்தி கோவிலுக்கெல்லாம் போகச் சொல்லிட்டு இப்ப ஞாபகமறதின்னு டபாய்க்கிறியே?"

கல்யாணசுந்தரம் கொஞ்சம் போல இடித்தான்.

"நான் என்னத்தடா டபாய்ச்சேன். ஊர் சொல்றத நான் சொன்னேன். விடு... எனக்கு சோலி கெடக்கு..."

பாட்டி நழுவும் விதத்தில் ஒருவித அவசரம் தெரிந்தது. பார்த்துக் கொண்டே இருந்த ஒருவர் கல்யாண சுந்தரத்தை நெருங்கினார்.

"தம்பி..."

"ஐயா... நீங்க..."

"நான் இந்த ஊர்ல இருக்கற ஒரே வாத்தியார். என் பேரு சிவஞானம்."

"நல்லதுங்க... சங்கரநாராயணனுக்கு நீங்கதான் வாத்தியாரோ?"

"ஆமா... அஞ்சாங்கிளாஸ் வரை அவன் இந்த ஊர் திண்ணைப் பள்ளிக்கூடத்துலதான் படிச்சான். அப்ப நான்தான் வாத்தியார். போகட்டும், உள்கள ஒண்ணு கேக்கலாமா?"

"கேளுங்க..."

"உங்களுக்கு ஏதும் தங்க நாணயம் கிடைச்சிச்சோ?"

"எனக்கில்லீங்க... என் சினேகிதன் உப்பிலிக்கு குளத்துல குளிக்கும்போது கிடைச்சிச்சு."

"அது அந்தக் கிழவிக்கு தெரியுமோ?"

"நல்லா தெரியும். அதை கேள்விப்பட்டுதான் அவங்க எங்கிட்ட வந்து பேசினாங்க. என்னென்னவோ சொன்னாங்க..."

"நினைச்சேன்... வேற யாருக்கு தெரியும்ஃ"

"வைத்தியருக்குங்க..."

"நாய்கடிக்கு வைத்தியம் பார்ப்பானே அந்த வைத்தியனுக்கா..."

"ஆமாங்க. பக்கத்து ஊர்ல இருக்காரே அவர்தான்."

"வைத்தியன் உங்கள ரொம்ப மிரட்டியிருப்பானே..."

"ஆமாங்க. இந்த ஊருக்குன்னு ஒரு கதை இருக்கே. அதை சொன்னாரு. எட்டு காவல் தெய்வம் எட்டு பக்கம் நின்னு காவல் காக்குதாமே..."

"சொன்னானா...?"

"சொன்னாருங்க... இட் ஈஸ் வெரி இண்ட்ரஸ்ட்டிங்..."

"அந்த மாதிரி புருடால்லாம் இண்ட்ரஸ்ட்டாதான் இருக்கும் ஆமா அதை நம்பிட்டீங்களா?"

"நம்பினோமோ நம்பலையோ... குழம்பியிருக்கோம்."

வாத்தியார் அதைக் கேட்டு கல்யாணசுந்தரத்தை ஆழமாகப் பார்த்தனார். பின் நிறைய யோசிக்கத் தொடங்கினார்.

"என்ன சார் யோசிக்கறீங்க. நீங்க என்ன சொல்றீங்க...?"

"நான் என்னத்த சொல்ல... ஊரே உங்களை மாதிரிதான் பயந்தும் குழம்பியும் கிடக்குது"

"அப்ப நீங்க...?"

"எல்லாம் கட்டுக்கதை..."

"அப்ப புதையல்...?"

"அது மட்டும் உண்மை. ஆனா அதை தெய்வங்கள் காவல் காக்குது. அதை எடுக்க ஆசைப்படறவங்க அழிஞ்சி போயிடுவாங்க. பைரவசாமி விடமாட்டார். சக்களத்தி சாமியா இருந்து கும்புட்றவங்களை மட்டும் ஒண்ணும் செய்யமாட்டான்னு சொல்ற எல்லாமே கட்டுக்கதை..."

"எப்படி நீங்க மட்டும் இதை கட்டுக்கதைன்னு சொல்றீங்க...?"

"இதைச் சொல்ல தனியா ஒரு மூளை தேவையா தம்பி? பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கா முடிஞ்ச கதையா, ஜமீன் சொத்தை கள்ளங்கிட்ட இருந்து காப்பாத்த ஆசைப்பட்டு சொன்ன ஒரு பொய் இப்ப ஒரு புராணமாவே இந்த ஊர்ல நம்பப்பட்டுகிட்டிருக்கு."

"புரியலையே..."

"இந்த ஊர் வளமான ஊர். இந்த ஊர் ஜமீன்

ரொம்ப செழிப்பான ஜமீன். ஆனா இந்த ஊரைத் தவிர சுற்றுப்பட்டுல இருக்கற கிராமங்கள் வானம் பார்த்த பூமிங்க, காவேரிப்பாசனம் இந்த ஊரோட சரி. இதனால அசலூர்க்காரங்க வயல் வேலைக்கு இந்த ஊருக்குதான் வருவாங்க.

பழைய ஜமீன்தார் ஒரு கொடுமைக்காரர் . ஆகையால கூலியை ஒழுங்கா தராம கஷ்டப்படுத்தினார். குடிக்க தண்ணீர் கூட அவர் தரலை. இதனால நக்ஸலைட்டுங்களும் கள்ளர்களும் உருவானாங்க. கன்னம் வைச்சு திருடினாங்க."

"கன்னம் வைக்கறதுன்னா?"

"சொல்லிட்டு திருட வருவாங்க. நாம எவ்வளவுதான் ஜாக்கிரதையா இருந்தாலும் நம்மளை ஏமாத்திட்டு திருடிகிட்டு போயிடுவாங்க. அப்படித்தான் ஜமீனுக்கும் குறி வெச்சாங்க..."

"ஐ... சீ..."

"ஜமீன்தாரிணி கெட்டிக்காரி. அவ்வளவு நகைகளையும் எங்கையோ பதுக்கிட்டாங்க. இதனால கள்ளங்க ஏமாந்து போய் ராணியை கொன்னுட்டாங்க..."

"சரி... எட்டு சாமி காவல் கதையெல்லாம் இதுல எப்படி?"

"அதெல்லாம் சிலர் சுயநலத்தோட சொன்ன கதை. ராணி ஒளிச்சு வெச்ச புதையலை தேடற ஒரு கூட்டம் தங்களுக்கு சமமா பலரும் தேடறத பார்த்து ஒரு ஐடியா பண்ணி, இப்படி ஒரு கதையை உருவாக்கினாங்க. அதுக்கு தோதா அப்ப சக்களத்தி கரட்டுல ஒரு சிற்பி செதுக்கின சிற்பங்களை ஊர்ல எட்டு திசைலயும் கொண்டு, போய் வெச்சுட்டு அதுல ஒண்ணான நாய் சிலையை குளத்தங்கரைலயும் வெச்சாங்க. அதுக்குப் பிறகு புதையல தேடி வர்ற கூட்டம் குறைஞ்சது. மீறி எட்டு சாமிங்க பேரில் போட்டுட்டாங்க. பாவம் அந்த கற்சிலைங்க. இவங்க பழிபாவத்துக்கு அதுங்க மாட்டிக்குதுங்க."

"அது சரி யார் அவங்க..."

"வரதாயி கிழவியோட குடும்பம்தான். கொஞ்சம் நாள் தான் புதையல் பேச்சு இல்லாம இருந்துச்சு. இப்ப நீங்க வரவும் ஆரம்பமாயிடிச்சு."

"இவ்வளவு சொல்றீங்களே- உங்கள எப்படி விட்டு வெச்சுருக்காங்க..."

"எப்படியோ தப்பிச்சு வாழ்ந்துகிட்டு இருக்கேன். என்னையும் அந்த கிழவி நாயை ஏவி விட்டு கடிக்க வெச்சா... அப்பல்லாம் வைத்தியன்தான் காப்பாத்தினான். நானும் சக்களத்தியை கும்புட்ற மாதிரி நடிச்சு அவங்கள ஏதாத்திகிட்டு இருக்கேன்."

"அப்ப கடிச்ச நாய் அவங்களோடதா?"

"ஆமா... தெரு நாய்தான். இருந்தாலும் அவ பேச்சை கேக்கற மாதிரி பண்ணி வெச்சிருக்கா..."

"நேத்து ராத்திரி குளத்தங்கரை பக்கம் ஒரு அவசரத்துக்காக ஒதுங்கினேன். அவசரம்னா புரியுதா ஜலவாதி."

சொல்லுங்க..."

"அப்ப கிழவியும் அவளோட ஆளங்களும் குளத்துல இறங்கி முங்கிட்டிருந்தாங்க... முதல்ல எனக்கு புரியல. பிறகுதான் உங்க நண்பரை நாய் கடிச்சது, நீங்க கரட்டுக்கு போனதெல்லாம் தெரிய வந்தது. கூட்டிக் கழிச்சேன். தற்செயலா உங்க மூலமா அந்த புதையல் ரகசியம் கிழவிக்கு தெரிய வந்துருக்கு. உடனே குளத்துல இறங்கி தேட ஆரம்பிச்சுட்டா."

வைத்தியரும் இதையேதான் சொன்னார். அப்ப... பாட்டி குளத்துல இறங்கி தேடியிருக்காங்க."

"சந்தேகமேயில்லை. சத்தமில்லாம அவ போறத பார்த்தா தெரியல. புதையலை அவ எடுத்துட்டா."

"இதை நீங்க பார்த்தீங்களா?"

"ஆமாம்... அவ வீட்டுக்கு போனா உண்மை தெரிஞ்சிடும். நான் அவள் புதையல் எடுத்ததை

பார்த்தேன்."

"மைகாட்... புதையல்ங்கறது அரசாங்க சொத்து. ஒரு தனி மனிதர் தனக்கு சொந்தமாக்கிக்கக் கூடாது..."

"அது எனக்கு தெரியும். அதை தேடி எடுக்கறதுக்காக பொய் கதை சொல்றது... ஊரை மிரட்றது... கண்கொத்தி பாம்பா எல்லாரையும் கவனிக்கறது எல்லாமே தப்புதானே?"

"அப்சல்யூட்லி... அது சரி அந்த சக்களத்தி கரட்டுல ஒரு கால் கை இல்லாத மனுஷர் இருக்காரே அவர் யார்?"

"அவர் பேர் சித்திரன். கிழவியோட கையாள். கரட்டுக்கு யார் வந்தான் போனான்னு சொல்றவன். ஊர்ல உலவற கதையை கட்டுக்குலையாம வெச்சிருக்கறவன். அங்க போறவங்கிட்ட பல சந்தர்ப்பங்கள்ல நகை, பணத்தை எல்லாம் பிடுங்கிகிட்டிருக்கான்.

அந்த பாதை வழியா போறவங்களை கட்டைக்காலும், கையும் அணிஞ்சிகிட்டு போய் மிரட்டி மயக்கமடையச் செய்துருக்கான். கும்புடாம போறவங்கள மிரட்டியிருக்கான். நான் போன சந்தர்ப்பத்துல ஒரு கள்ளிப் பெட்டியில கட்டக்கால், கையைப் பார்த்துட்டு இதை தெரிஞ்சுக்கிட்டேன்..."

"வாவ்... எவ்வளவு விஷயங்கள்! இவ்வளவு தெரிஞ்ச நீங்க எப்படி சும்மா இருந்தீங்க? போலீசுக்கு போறதுக்கென்ன?"

"போறது சுலபம். ஆனா இதை எல்லாம் நிரூபிக்கறது ரொம்ப கஷ்டம். அவ்வளவு ஏன் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரே புதையல் ஆசையோட இந்த ஊர்ல வந்து அட்டகாசம் பண்ணினார். ஆவரை அநியாயமா நாய விட்டு கடிக்க வெச்சு அவர் படாதபாடு பட்டார். சாகும் போது நாய் மாதிரி குலைச்சுகிட்டெ செத்துப் போனார்..."

"எவ்வளவு பெரிய கொடுமை? உங்களை ஊர்ல யாரும் நம்பலையா?"

"பயப்படறாங்க. பொதுவுல கடவுள்

நம்பிக்கையோட முட்டாள்தனமான இந்த மாதிரி கொடூரமான விஷயங்களை படற விட்டா அது நீண்ட காலத்துக்கு அப்படியே இருக்கும். இதுவும் அப்படித்தான்..."

"சரி இப்ப என்ன செய்யலாம்?"

"காதைக் கொண்டு வாங்க சொல்றேன்!"

கல்யாண சுந்தரம் காதைக் கொடுக்க, அவரும் ரகசியமாக எதையோ சொல்ல...

## 12

**"எல்லா ரகசியங்களும் ஒருநாள் அம்பலமாகித்தான் தீர வேண்டும். எல்லா பித்தாட்டங்களும் ஒருநாள் வெட்ட வெளிச்சமாகித்தான் தீர வேண்டும்."**

கல்யாணம் முடிந்து விருந்து பந்தியும் முடிந்து விட்டது. பந்தல் நிழலில் சிலர் மட்டும் பேசிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். கூடிய கூட்டம் கரைந்து விட்டிருந்தது.

சந்திராவதி நண்பர்களை வாயார புகழ்ந்து கொண்டிருந்தாள். கல்யாணசுந்தரம் மட்டும் அங்கே இல்லாமல் எங்கோ போயிருந்தான்.

"எங்க தம்பி போயிடிச்சு கல்யாணம்?"

"வைத்தியர் வீட்டுக்கு மருந்து வாங்கிட்டு வர போயிருக்கோ என்னவோ...?"

"எப்படியோப்பா நாலு பேரும் வந்திருந்து இந்த கல்யாணத்தை நடத்திக் கொடுத்துட்டீங்க. நீங்க இல்லாட்டி நான் ரொம்ப கஷ்டப்பட்டிருப்பேன்..." என்றவளின் கண்களில் கண்ணீர் பிரளல்.

"அட என்னம்மா நீங்க... ஏதோ எங்களால ஆனதை செய்தோம்..." என்றான் சுகுமார்.

"அதுவும் எங்க செய்தோம்- இனிமேல்தான் செய்யணும்" –என்றபடி சிரித்தான் ரமேஷ்.

நடுவில் சம்மந்தியம்மாள் குறுக்கில் ஒரு நடை நடந்தாள். பந்தியில் ஒரு பிடி பிடித்து விட்டிருந்த களைப்பு... நண்பர்களைப் பார்த்து ஸ்னேகமாகச் சிரித்தாள். ஒரு தாம்பூலத்தட்டோடு போய் ஒரு நாற்காலியை

இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

பக்கவாட்டில் மறைவாக தென்னங்கிடுகுப் பந்தலின் அடைப்பு. அதில் ஒரு துவாரம். அதன் வழியே அந்த கறுப்பு நாய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தது. அது அவளைப் பார்ப்பதை ஒருவர் மட்டும் கச்சிதமாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

அது பக்கவாட்டு அடைப்பின் துவாரத்தில் முகத்தை உள்விட்டு காலால் பெரிதாக துவாரம் போட்டு உள்ளே வரப் பார்த்தது.

அதை நோட்டமிட்டுக் கொண்டிருந்தவர் யாருக்கும் தெரியாமல் பந்தல் தடுப்புக்கு அப்பால் எட்டிப் பார்த்தார்.

ஒருவன் அதன் மேல் தீக்குச்சிகளைக் கொளுத்தி அதன் பின் பக்கத்தில் போட்டுக் கொண்டிருந்தான். எங்கோ பார்த்தபடி ஓடத் தயாராக இருக்கிற மாதிரி நின்று கொண்டு அவன் அப்படிச் செய்வதும், அது சூடுதாளாமல் பந்தலைப் பிரிப்பதில் வேகமாவதும் நன்கு தெரிந்தது. பார்த்துக் கொண்டிருந்தவர் கண்களில் அதிர்ச்சி, ஆச்சரியம், திகைப்பு எல்லாம்.

சிறிது நேரம் வரை பரபரவென்று பந்தல் துவாரத்தில் தலையை விட்டு திணறிக் கொண்டிருந்த அந்த நாய் ஒரு கட்டத்தில் குபீரென்று சம்பந்தியம்மாளை நோக்கிப் பாய்ந்தபடி ஓடியது.

அடுத்த நொடி அந்த நாயின் மேல் அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டிருந்தவரின் துப்பாக்கித் தோட்டா சீறிப் பாய்ந்தது.

நாய் காலில் பாய்ந்த தோட்டாவுடன் சுருண்டு விழுந்தது.

கல்யாண வீடே கதி கலங்கிப் போய்விட்டது.

அந்த மனிதர் துப்பாக்கியை பாக்கெட்டில் வைத்தபடி நிமிர, எதிரே நண்பர்கள் மூவர். அவர் சிரித்தார்.

"இதுல யார் உப்பிலி" கேட்டார்.

உப்பிலி முன்னால் வந்தான்.

"கங்கிராஜீலேஷன்ஸ்... உங்களால பெரிய

பெரிய விஷயமெல்லாம் நடக்கப் போகுது..."

அவர் சொல்லும் போதே திபுதிபுவென்று அங்கே ஒரு கூட்டம் சேர்ந்து விட்டது.

"கமான்... இப்ப அந்த பாட்டியம்மா வீட்டுக்கு போகலாம். நாய்கடிங்கறது ஒரு அமானுஷ்யச் செயலில்ல... அது ஒரு திட்டமிட்ட தாக்குதல். மிஸ்டர் கல்யாணம் சுந்தரம் கொடுத்த கம்ப்ளைண்ட் ரொம்ப சரி. கமான் க்விக்..."

அவர்கள் அங்கிருந்து புறப்பட்டனர். எல்லோரும் பின்னாலேயே சென்றனர். சம்மந்தியம்மாள் வியர்த்துப் போயிருந்தாள்.

ழூழூழூ

வரதாயிப் பாட்டி வீடு.

வீட்டைச் சுற்றி போலீஸ்.

உள்ளே போய்விட்டு வெளியில் வந்த தாசில்தார் கையில் தூக்க முடியாத சைஸில் ஒரு வெண்கலப் பானை. பச்சைப் பழுப்பேறிப் பார்க்கவே விகாரமாக இருந்தது. அதன் உள்ளே தங்க நாணயங்கள், நகைகள்!

ஊரே அதைப் பார்த்து வாயைப் பிளந்தது.

பிரதானமாக கல்யாண சுந்தரமும் வாத்தியாரும் முன்னால் இருந்தனர்.

வரதாயிப் பாட்டியும் அவள் சாக்களும் ஒரு வேனில் பின்னால் ஏறினார்கள்.

"உப்பிலி, ரமேஷ், சுகுமார்... வாங்கடா. நம்மை பத்திரிகைல பேட்டியெல்லாம் எடுக்கப் போறாங்க" என்று கல்யாணசுந்தரம் வாத்தியாரோடு சேர்ந்து கொண்டு தனி வேனில் ஏறினான். வைத்தியரையும் கூட்டிக் கொண்டான். சங்கரநாராயணனும் ஏற வந்தான்.

"சங்கரா நீ போய் சம்மந்தி வீட்டுக்காரங்களை கவனி. நாங்க பாத்துக்கறோம். போலீஸ் சம்பிரதாயம் முடிஞ்ச பிறகு நாங்க வருவோம். நீ போடா..." –என்று அவளை கழட்டி விட்டனர்.

வாகனங்கள் புறப்பட்டன.

கல்யாணசுந்தரம், வாத்தியார் சொன்னதில் இருந்து தான் போலீஸ் ஸ்டேஷனுக்கு போய்

கம்ப்ளைண்ட் கொடுத்தது வரை சொல்லிக் கொண்டு வந்தான்.

ஊரின் நம்பிக்கையை காப்பாற்றுவதறகாக பொற்காசு உள்ள சம்மந்தியம்மாளை நாயை விட்டு கொலை செய்துவிடுவார்கள் என்று சந்தேகப்பட்டதை கூறி, அது மட்டும் உண்மையில் நடந்து விட்டால் வாத்தியார் சொன்ன விஷயம்தான் உண்மை. அப்படி நடக்காவிட்டால் ஊரில் நிலவும் கதைதான் உண்மையானது என்ற முடிவிற்கு வந்தது வரை கூறினான்.

"அப்புறம்தான் தெரியுமே... கறுப்பு நாய் கிழவி ஆளால சம்பந்தியம்மாளை நோக்கி பாஞ்சிச்சு. அதை சுட்டு ஒழிச்சோம். உப்பிலி விஷயத்துலையும் இப்படித்தான். நாயைத் தூர இருந்து கல்லால அடிச்சும், தீக்குச்சியை சுண்டி விட்டும் கோவமூட்டி கடிக்க வைச்சிருக்கணும்" என்று அதற்கொரு முற்றுப்புள்ளி வைத்தார். சப்-இன்ஸ்பெக்டர்.

"ஆமா புதையல் பானை எங்கே?"

"அது தாசில்தாரோட போய்கிட்டிருக்கு. அந்த ஜீப்புல தான் பாட்டி, புதையலை முங்கி எடுத்த அவளோட கையாள் காளன்ங்கறவன் இருக்கான்" –என்ற சப்-இன்ஸ்பெக்டர், "எப்படியோ பல வருஷமா ஒரு புதிரா இருந்த ஒரு விஷயத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வந்துட்டீங்க" –என்றபடி உப்பிலிக்குதான் கை கொடுத்தார்.

"எட்டு பொம்மைக் காவல், எல்லை தாண்ட முடியாதுன்னு எவ்வளவு பொய்கள்...?"

"இது சக்களத்தி கரடுன்னு ஒரு கரடு. மைல் கல்லையெல்லாம் தெய்வமா நினைச்சு கும்புட்றவங்க இருக்கற வரை இப்படிபட்ட நம்பிக்கைகள் இருக்கத்தான் செய்யும்."

கருத்துப் பரிமாற்றங்கள் கலகலப்பாக நிகழ்ந்து கொண்டிருக்க, வாகனங்கள் சக்களத்தி கரட்டை நெருங்கியிருந்தன.

தாசில்தாரும் புதையலும் வரதாயிப் பாட்டியும் உள்ள ஜீப் திடீரென்று தாறுமாறாக

ஓட ஆரம்பித்தது.

"யோவ் என்னய்யா... என்ன ஆச்சு?"

"சார் திடீர்னு பிரேக் பிடிக்கலை..." –டிரைவர் கதறினான். ஜீப் சீற்றம் குறையாதபடி ஓடிக் கொண்டிருந்தது.

"சார் எதுலையாவது மோதி நிறுத்தினாத்தான் நிறுத்த முடியும்?" டிரைவர் சொல்லும்போதே பாதையில் மண்ணெண்ணை வண்டிக்காரன் ஒருவன் பேரல் அடுக்கி டிரை சைக்கிளை மிதித்தபடி வந்து கொண்டிருந்தான்.

வேன் ஒன்று எதிரே அதிபயங்கரமாய் மோதுவது போல் வந்தது. அதிலிருந்து தப்பிக்க ஜீப் டிரைவர் பக்கவாட்டில் திருப்பினார்.

"மைகாட்... இப்ப பார்த்து ஒரு மண்ணெண்ணை வண்டி" –சொல்லிவிட்டு வாய் மூடவில்லை. ஜீப் வண்டி மேல் மோதி பக்கவாட்டில் கவிழ்ந்தது. புரண்டது அடுத்த நொடி குபீர் என்று தீப்பிடித்துக் கொண்டது.

ஆகாசத்துக்கு ஏறியது செந்நாக்கு தீப்பிழம்பு. பின்னால் வந்த வண்டிகள் அங்கங்கே அப்படியப்படியே தேங்கி நிற்க, கல்யாணசுந்தரமும் மற்ற நண்பர்களும் இறங்கி ஓடி வந்தனர்.

அதன்பிறகு அரை மணி நேரமாயிற்று நெருப்பை அணைக்க.

உள்ளே தாசில்தாரில் இருந்து வரதாயிப் பாட்டி மட்டும் அல்ல அந்த புதையல் பானையும் சுருகிச் சாம்பலாகியது. ஜீப் ஒரு இரும்புக் கூடாகத்தின் காட்சியளித்தது.

சற்றுத் தள்ளி பாதை ஒரு மைல் கல்லில் பரிமேலழகன் பட்டி கிராம பஞ்சாயத்து எல்லை ஆரம்பம் என்னும் எழுத்துக்கள்.

வைத்தியரும், வாத்தியாரும் அதைப் பார்த்து விட்டு நண்பர்கள் பக்கம் திரும்பினார்கள்.

"வாத்தியாரோ... நான் பொய் சொன்னதா சொன்னீரே. இப்ப என்னய்யா சொல்றீர்?" –

வைத்தியர் கேட்டார்.

"இப்பவும் சொல்றேன். கதை பொய்தான். இல்லாட்டி கிழவி ஏன் நாயை ஏவி விடணும்? புதையலை அவளே எதுக்கு அமுக்கிக்கப் பார்க்கணும். அவளை சாமிங்க தண்டிச்சிருக்கணும்ல...?"

"அப்ப இப்ப தண்டிச்சது யாருய்யா?"

யாராலும் அந்தக் கேள்விக்கு மட்டும் சரியான விடையைக் கூற முடியவில்லை.

சரியாக 48 மணி நேரம் கூட ஆகவில்லை.

நண்பர்களைப் பொறுத்தவரை அழகன்பட்டி அனுபவம் அவர்களுக்கு காலத்துக்கும் ஞாபகம் இருக்கும்....

ஆனால் அதை எப்படி எடுத்துக் கொள்வது என்பது மட்டும் அவரவர் விருப்பம்.

எது நிஜம் என்ற கேள்வி இனி எதற்கு?

முற்றும்

Tweet what you have read!